# திருமறைத்தீபம்



# பொருடளக்கம்

1. முன் அட்டை

2. ஆசிரியர் கடிதம்

3. உன்னைப் பற்றிய குற்றப் பதிவேடும் உனக்குள்ளிருக்கும் பொல்லாத இருதயமும் - அல்பர்ட் என். மார்டின்

4. உன்னால் முடியும் தம்பி!

5. மனித சித்தம்: வரலாற்று, இறையியல் பின்னணி

6. சுதந்திரமாக இயங்கும் மனித சித்தம்

7. நன்மையை மட்டும் நாடிச் செய்த சித்தம்

8. மனித சித்தம்: சில கேள்விகளும் - சில பதில்களும்!

9. ஆத்தும சிகிச்சையளிக்கும் ஆவிக்குரிய பிரசங்கம்

10. பின் அட்டை

**BIBLE LAMP**
**திருமறைத்தீபம்**

**Issue No. 3 of 2012**
**ISBN 1173-7255**

இக்காலாண்டுப் பத்திரிகையில் வெளிவரும் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக் கூடாது.

ஆசிரியர்: ஆர். பாலா

**Editor:** R. Bala
**Publisher:** Sovereign Grace Publications
**Address:** P O Box 62 159 Sylvia Park, Auckland 1644 New Zealand
**Telephone:** 64 9 272 8061
**e-mail:** blamp@ihug.co.nz
**Web site:** www.biblelamp.me

"கொள்கைகளையும் கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத் தடங்கல் என்றுதான் கூற வேண்டும்."

சி. எச். ஸ்பர்ஜன்
1834-1892

# வாசகர்களே!

இன்னொரு இதழை நிறைவாக முடித்து உங்கள் கையில் நேரத்தோடு வந்து கிடைக்க கர்த்தர் மறுபடியும் துணை செய்திருக்கிறார். ஒவ்வொரு இதழையும் தயாரிக்கின்றபோது அவசியமான ஆக்கங்களை, சீராகத் தயாரித்து வெளியிட கர்த்தர் தன்னுடைய ஆவியின் மூலம் ஆசிரியரை வழிநடத்தி வரும் அருமையைக் கடந்த பதினெட்டு ஆண்டுகளாகக் கவனித்து அவருக்கு நன்றி சொல்லி வருகிறோம். எதை எழுத வேண்டும், எப்போது எழுத வேண்டும் என்பதிலெல்லாம் ஆவியின் வழிகாட்டுதலும், துணையும் இல்லாமல் செய்துவிட முடியாது. ஆவிக்குரிய பணிகளில் அவருடைய தூண்டுதலையும், உந்துதலையும் தொடர்ந்து அனுபவ ரீதியாகக் கண்டு வருகிறோம். இதழை முடிக்கின்ற ஒவ்வொரு தடவையும் ஆவியானவரின் வழிநடத்துதலே 'இந்த முறையும் நிறைவாக இதழ் வந்திருக்கிறது' என்று எங்களை உற்சாகப்படுத்துகிறது. இதை அச்சிட்டு நேரத்தோடு அனுப்பி வைக்கின்ற அச்சகத்தாரையும் இந்த நேரத்தில் நினைவுகூருகிறேன். நம் பணிக்கு அவர்கள் துணை மிகப் பெரியது. இதழ் நிறைவு பெற துணை செய்திருக்கின்ற அனைவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக!

இந்த இதழில் மறுபடியும் போதகர் அல்பர்ட் என். மார்டின் அவர்களின் அருமையானதொரு சுவிசேஷ செய்தி வந்திருக்கின்றது. அந்த செய்தியோடு, அது பற்றிய ஒரு குறிப்பையும் இந்த இதழில் தந்திருக்கிறேன். இந்த செய்தி உங்களுக்கு நிச்சயம் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறேன். ஏனைய ஆக்கங்கள் அனைத்தையும் இந்த முறை நானே எழுதியிருக்கிறேன். அதற்குக் காரணம் வேதத்தின் முக்கியமானதொரு போதனையை இந்த இதழில் ஆராய ஆரம்பித்திருக்கிறோம். அது மனித சித்தத்தின் தன்மை பற்றியது. அது பற்றிய கோளாரான எண்ணங்கள் கிறிஸ்தவர்கள் மத்தியில் தொடர்ந்து இருந்து வருகின்றது. அந்த எண்ணங்கள் சுவிசேஷ ஊழியத்தைப் பாதித்து, விசுவாச வாழ்க்கையையும் கறைபடுத்திக் கொண்டிருக்கின்றன என்பதை அநேகர் உணராமல் இருக்கிறார்கள். நம்முடைய கருத்துக்களை அடிக்கடி ஆராய்ந்து பார்த்து, திருத்திக்கொண்டு வேத எண்ணங்கள் மட்டும் நம் இருதயத்தில் எப்போதும் நிறைந்திருக்கும்படிப் பார்த்துக்கொள்ள மனித சித்தம் பற்றி வந்திருக்கின்ற, வரப்போகின்ற ஆக்கங்கள் துணைபுரிய வேண்டும் என்பது என்னுடைய விருப்பமும், ஜெபமும்.

இதுவரை வந்திருக்கின்ற இதழ்களைப் போலவே இந்த இதழையும் கர்த்தர் பலருடைய இருதயங்களிலும் பயன்படுத்தி, சிந்திக்க வைத்து ஆவிக்குரிய வளர்ச்சியைக் கொடுக்க வேண்டும் என்ற வாஞ்சையோடும், ஜெபத்தோடும் உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன். - ஆசிரியர்.

# உன்னைப் பற்றிய குற்றப் பதிவேடும் உனக்குள்ளிருக்கும் பொல்லாத இருதயமும்

- அல்பர்ட் என். மார்டின் -

## கஷ்டங்கள்! துயரங்கள்! பிரச்சனைகள்!

*இந்த உலகத்தில் நம் வாழ்க்கை கஷ்டங்கள் நிறைந்ததாகவே இருக்கின்றது. பலவிதமான தொல்லைகள் நமக்கு ஏற்படுகின்றன. குடும்பத்தில் பிரச்சனை, பொருளாதாரப் பிரச்சனை, சரீரப் பிரச்சனைகள், அலுவலகத்தில் பிரச்சனைகள், இப்படியாக நாம் எல்லோருமே ஏதாவதொரு விதத்தில் பிரச்சனைகளை அன்றாடம் சந்திக்கிறோம்.*

*இந்தப் பிரச்சனைகளையெல்லாம் தீர்த்துக்கொள்ளுவதற்கு பல விதங்களில் முயற்சி செய்கிறோம். குடும்பப்பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ள நாம் குடும்ப ஆலோசகரை நாடுகிறோம். நமக்கு பணப்பிரச்சனை இருக்குமானால் வேறு நல்ல வேலை தேடிக்கொள்ள முயற்சிக்கிறோம். சரீரத்தில் ஏற்படுகின்ற நோய்களைக் குணமாக்க வைத்தியரை நாடிப் போகிறோம். நமது நிலையை சரிப்படுத்திக் கொள்ளுவதற்கு நம்மாலான அனைத்தையும் செய்கிறோம்.*

*இவை எல்லாவற்றிற்கும் மேலான மிகப்பெரிய பிரச்சனை ஒன்று நமக்கு இருக்கிறது. அதைத் தீர்ப்பதற்கு நாம் முயற்சி எடுக்காவிட்டால் நமது நிலைமை மிகவும் மோசமானதாகிவிடும். சுகவீனங்கள், பொருளாதாரக் குறைவு, வேறு எந்தப் பெருங்கஷ்டங்கள் ஏற்படுத்தும் விளைவுகளைக் காட்டிலும் அது மோசமான விளைவை ஏற்படுத்திவிடும். இருந்தாலும் மனித இனம் அதைக் குறித்து எந்த அக்கறையும் காட்டாமல் இருந்துவருகிறது.*

*இந்த மிகப்பெரிய பிரச்சனைக்கு இரண்டு பக்கங்கள் இருக்கின்றன. அவற்றைத்தான் நான் உன்னைப் பற்றிய குற்றப் பதிவேடும் உனக்குள்ளிருக்கும் பொல்லாத இருதயமும் என்ற தலைப்பில் கொடுத்திருக்கிறேன். எல்லா ஆண்களும், பெண்களும், சிறுவர்களும், சிறுமிகளும் இந்தப் பிரச்சனையை சுமந்துகொண்டிருக்கிறார்கள் என்று கடவுள் வேதத்தில் விளக்கியிருக்கிறார்.*

*குடும்பப்பிரச்சனைகள், பொருளாதாரம், சுகவீனம் போன்ற*

*பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு நீ எடுக்கின்ற முயற்சிகள் எல்லாம் அவசியமானதுதான். ஆனால், கடவுளின் நியாயஸ்தலத்தில் பதிவு செய்து வைக்கப்பட்டிருக்கின்ற உனது இருதயத்தின் பொல்லாத செயல்கள் பற்றிய பதிவுகளை சரிசெய்து கொள்வதும், உன்னுடைய கெட்டுப்போன இருதயத்தை புதுப்பித்துக் கொள்வதும் அவற்றையெல்லாம் விட முக்கியமானது. உன்னுடைய மொத்தப் பிரச்சனைகளில் இருந்து நீ விடுபடுவதற்கு இது அவசியமாயிருக்கிறது. உன்னுடைய பொல்லாத இருதயத்தையும் அதன் பொல்லாத செயல்கள் பற்றிய பதிவுகளையும் நீ உணராமலும், அதைத் தீர்ப்பதற்கு ஒரு வழியைக் கண்டுபிடிக்காமலும் தொடர்ந்து வாழ்வாயானால், நீ பிறக்காமலிருந்திருந்தாலே நன்றாயிருந்திருக்கும் (மாற்கு 14:21).*

*உன்னுடைய தற்கால நன்மைகளுக்காகவும், நித்திய நன்மைகளுக்காகவும் நீ இந்தப் பெரிய பிரச்சனை எப்படிப்பட்டது என்பதைக் குறித்து கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்போதுதான் அதைத் தீர்ப்பதற்கான ஒரு வழியை உன்னால் கண்டுபிடிக்க முடியும்.*

## உன்னுடைய குற்றங்களின் பதிவேடு

*இந்த உலகத்திலுள்ள ஒவ்வொருவரையும் பற்றிய ஒரு குற்ற அறிக்கை பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. கடவுளே அதைக் கருணை காட்டி தள்ளுபடி செய்தாலொழிய அந்த அறிக்கையை யாராலும் அங்கிருந்து அகற்றிவிட முடியாது. "யாவரும் பாவத்திற்குட்பட்டவர்கள்", "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை", "நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை" (ரோமர் 3:9, 10, 12) என்று கடவுள் மனிதகுலத்தைப் பார்த்து சொல்லியிருப்பதை வேதம் சுட்டிக் காட்டுகிறது.*

*கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறவர்களாகிய நாம் அனைவரும் அவருக்குக் கணக்குக் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அண்ட சராசரங்களை பராமரித்து வருகின்ற அவருடைய இயற்கையின் விதிகளுக்கு உட்பட்டவர்களாகத்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதுமாத்திரமல்லாமல், அவருடைய நீதியான சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட வேண்டியவர்களாகவும் நாம் இருக்கிறோம். ஒருவேளை நாம் அவருடைய ஆளுகையை ஏற்கமுடியாது எனப் போர்க்கொடி உயர்த்துகிறவர்களாக இருக்கலாம். ஆனால், அவருக்குக் கணக்குக் கொடுக்க வேண்டிய நமது நிலையை அது ஒன்றும் மாற்றிவிடப் போவதில்லை. அவர் ஆளுகின்ற கடவுள், நாம் அவருடைய படைப்புயிர்கள் என்பதுதான் உண்மையான நிலைமை.*

*நாம் பிறந்த நாட்டிற்கு பொறுப்புள்ள குடிமகனாக இருப்பது போலவே, கடவுளுக்கும் நாம் பதில் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். நீ ஒரு நாட்டில் பிறந்தவுடனேயே அந்த நாட்டின் குடிமகனாகக் கருதப்படுகிறாய். அந்த நாட்டின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டவனாக இருக்கிறாய். அந்த நாட்டிற்கு நீ வரி செலுத்த மறுத்தாலோ, அல்லது*

யாருடைய பொருட்களையாவது திருடினாலோ, யாரையாவது தாக்கினாலோ உன் குற்றத்திற்கு நீ பதில் சொல்ல வேண்டியவனாகிறாய். உன் மீது காவல்துறையினரால் குற்றம் சுமத்தப்படும். நீதிமன்றத்தில் நீ விசாரிக்கப்படுவாய். உன் குற்றத்திற்குரிய தண்டனை வழங்கப்படும். நான் இந்த சட்டதிட்டங்களை ஒத்துக் கொள்ள மாட்டேன் என்று நீ எதிர்த்து நின்றாலுங்கூட, உன் குற்றத்திலிருந்தும் அதற்குரிய தண்டனையிலிருந்தும் உன்னால் தப்பித்துக் கொள்ள முடியாது. நீ சட்டதிட்டங்களை ஒத்துக் கொள்ளாமலிருப்பதோ, அதைக் குறித்த மாறுபாடான கருத்துக்களைக் கொண்டிருப்பதோ இங்கு முக்கியமல்ல. உன் சொந்தக் கருத்துக்களை எந்த நாடும் ஒரு பொருட்டாக மதிக்கப்போவதில்லை. நீ உன் நடவடிக்கைகளுக்கு கணக்குக் கொடுக்க வேண்டியவனாக இருக்கிறாய் என்பதே எந்த நாட்டின் சட்டத்திற்கும் அடிப்படையாயிருக்கிறது.

கடவுளின் ஆளுகையிலுள்ள நீ இப்போது சில உண்மைகளை சந்தித்துதான் ஆகவேண்டும். நீ கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறாய். ஆகவே அவருக்குக் கணக்குக் கொடுக்க வேண்டியவனாக இருக்கிறாய். அதுமாத்திரமல்ல, நீ கடவுளுக்கு விரோதமாக பாவம் செய்தவனாகக் காணப்படுகிறாய். உன் பாவங்களின் காரணமாக, நித்திய தண்டனை பெறுவதற்குதான் நீ தகுதியுள்ளவனாயிருக்கிறாய் என்று கடவுள் உன்னைக் குறித்து தீர்ப்பு அளித்திருக்கிறார். உன்னுடைய பிரச்சனையில் இது முதலாம் பாகம். அதாவது, உன்னைக் குறித்த ஒரு குற்றப்பத்திரிக்கை கடவுளின் நியாயஸ்தலத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் குற்றங்களுக்காக நீ நியாயத்தீர்ப்பு நாளிலே தண்டனை பெறப்போகிறாய். அதை நீ சட்டபூர்வமாக சரிசெய்து கொள்ளாவிட்டால் உனக்கு தண்டனை நிச்சயம்.

உன்னைப் படைத்தவரும், நீ கணக்குக் கொடுக்க வேண்டியவருமான கடவுளுக்கு உன்னைப் பற்றிய அனைத்தும் நன்றாகத் தெரியும். “அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது. அவருக்கே நாம் கணக்கொப்புவிக்க வேண்டும்” (எபி 4:13) என்று வேதம் நமக்குப் போதிக்கிறது. இரகசியமாகவோ அல்லது வெளிப்படையாகவோ நீ செய்கிற எல்லாவற்றையும் கடவுள் பார்த்துக் கொண்டிருக்கிறார். “கர்த்தருடைய கண்கள் எவ்விடத்திலுமிருந்து, நல்லோரையும் தீயோரையும் நோக்கிப் பார்க்கிறது” (நீதி 15:3) என்கிறது வேதம்.

அதுமட்டுமல்ல, அவருடைய நீதிசட்டங்களை மீறி நடக்கின்ற உன்னுடைய ஒவ்வொரு செயலையும் அவர் கவனமாக குற்றப்பதிவேட்டில் பதிவு செய்து கொண்டுவருகிறார். மனதாலும், வார்த்தையாலும், கருத்துக்களாலும், செயல்களினாலும் அவருடைய சட்டத்தை மீறுகின்ற உன்னுடைய குற்றங்கள் ஒவ்வொன்றையும் அவர் அதில் பதிவு செய்கிறார். நியாயத்தீர்ப்பின் நாளிலே, குற்றங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கிற அந்தப் புத்தகங்கள் திறக்கப்படும்; அவரவர் தங்கள் செய்கைகளுக்கேற்ற தீர்ப்பைப் பெறுவார்கள் என்று வேத வசனம் சொல்லுகிறது. “பின்பு நான்

*பெரிய வெள்ளை சிங்காசனத்தையும், அதின்மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன். அவருடைய சமுகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்று போயின. அவைகளுக்கு இடங்காணப்படவில்லை. மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன். அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன. ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது. அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள். சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது. மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள். அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம். ஜீவப்புஸ்தகத்தில் எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்" (வெளிப் 20:11-15). பார், உன்னுடைய பாவங்களையெல்லாம் கடவுள் அறிந்து வைத்திருக்கிறாரே? அதற்காக உன்னை ஒரு நாள் நியாயந்தீர்க்கப் போகிறாரே? இது உன்னை நடுங்க வைக்கவில்லையா?*

*கடவுளுக்கும், அவருடைய நீதிச்சட்டங்களுக்கும் விரோதமாக, நீ செய்த உன்னுடைய பாவங்களின் ஆழ, அகலங்களை ஆராய்ந்து பார். பத்துக் கட்டளைகளில், நீ அவரை முழு மனதோடு நேசிக்க வேண்டுமென குறிப்பிட்டிருக்கிறார். அவருக்குப் பதிலாக எந்தவொரு கடவுளையும் நீ வணங்கக்கூடாது என்கிறார். மனிதன் தனக்கு மனதில் தோன்றுகிறவிதமாக கடவுளை உருவாக்குவதோ, தன் எண்ணப்படி தேவனைத் தொழுதுகொள்வதோ கூடாது என்கிறார். அவர் வெளிப்படுத்தித் தந்திருக்கின்ற வண்ணமாகவே அவரைத் தொழுது அவருக்கு சேவை செய்ய வேண்டும். அவருடைய நாமத்தையும் அவருடைய வார்த்தையையும் மகிமைப்படுத்த வேண்டும். அவர் குறித்திருக்கின்ற நாளிலே அவரை ஆராதிக்கவும், உன் வேலைகளிலிருந்து ஓய்ந்திருக்கவும் வேண்டும். அவர் நியமித்திருக்கின்ற மேலான அதிகாரங்களுக்கு (தகப்பன், தாய், ஆசிரியர், கணவன், மேலதிகாரிகள்) மரியாதை செலுத்த வேண்டும். கொலை செய்யக்கூடாது. விபச்சாரம் செய்யக்கூடாது. பிறர் பொருளின் மீது ஆசைப்படக் கூடாது. திருடக்கூடாது. பொய் சொல்லக் கூடாது. கடவுள் விலக்கி வைத்திருக்கும் காரியங்களின் மீது மனதாலும் ஆசைப்படக்கூடாது (யாத் 20:1-17) என்றெல்லாம் விவரமாகக் கடவுள் வேதத்தின் மூலமாகக் கட்டளையிட்டிருக்கிறார். இயேசுவிடம் ஒருவன் வந்து கேட்டான், கற்பனைகளிலெல்லாம் மிகவும் முக்கியமான கற்பனை எதுவென்று. அதற்கு இயேசு, "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக. இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கின்ற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவது போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" (மத் 22:37-39) என்று கூறினார்.*

*வேதவசனங்களின்படிப் பார்த்தால் இவைகளில் எத்தனையோ கட்டளைகளை நீ மீறி கடவுளின் சாபத்துக்குட்பட்டவனாக இருப்பது உனக்குத் தெரியவில்லையா? இந்த உலகத்தில் ஒருவேளை நீ காவல் துறையினரால் குற்றஞ்சாட்டப்படாதவனாக இருக்கலாம். ஆனால் பரலோகத்திலே உன் மீது குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறதே!*

*அந்தக் குற்றங்களை சரிப்படுத்திக் கொள்வதற்கு உன்னால் சுயமாக எதுவும் செய்ய முடியாது என்பது இந்தப் பிரச்சனையை மேலும் பெரிய பிரச்சனையாக்குகிறது. கடவுளால் மாத்திரமே அந்தக் குற்றப்பத்திரிகையை சரிப்படுத்த முடியும். நீ பரலோகத்துக்குள் திருட்டுத்தனமாக நுழைந்து அந்தப் பதிவேடுகளில் இருப்பவற்றை அழித்துவிட முடியாது. கடவுள் ஏதோ தவறாக உன்னை நரகத்தின் பிரஜையாக எண்ணிவிட்டதுபோல் நீ நினைத்துக் கொண்டு, பக்திவேஷமிட்டும், வெளிப்பிரகாரமாக நல்லவன் போல் நடந்தும் கடவுளை ஏமாற்றிவிட உன்னால் முடியாது. பரலோகத்தின் நியாயஸ்தலத்தில் நீ லஞ்சம் கொடுக்க முடியாது. உன்னுடைய பாவங்களுக்குரிய கிரயத்தை கடவுள் முழுவதுமாக உன்னிடம் கேட்பார்: "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23) என்கிறது வேதம். கடவுள் தமது பரிசுத்தமான நீதிச்சட்டத்தின் வழிப்படியே சரியான தீர்ப்பளிப்பார். இல்லையென்றால் அவர் நீதியுள்ள கடவுளாயிருக்க முடியாதே.*

*இந்தப் பிரச்சனையின் தீவிரத்தை நீ சரியாகப் புரிந்து கொண்டாயானால், வாழ்க்கையின் மற்றப் பிரச்சனைகள் அனைத்தும் உன் கண்களுக்கு அற்பமானவையாகத் தெரியும். அப்போது, நீ கடவுளிடம் அவருடைய இரக்கத்திற்காக கெஞ்சி மன்றாடுவாய். ஆம், கடவுளிடம் இரக்கம் உண்டு என்பதே நல்ல செய்தியாயிருக்கிறது இல்லையா? பாவிகளின் குற்றப்பதிவுகளை கடவுள் மிகுந்த கிருபையோடும் வல்லமையோடும் நீக்கிப் போடுகிறார்; அவர்களுக்கு பதிலாக அந்தக் குற்றங்களை சுமந்த வேறொருவரைத் தண்டிப்பதன் மூலமாக தமது நீதியை அவர் நிறைவேற்றுகிறார்.*

## உனது பொல்லாத இருதயம்

*உனது பிரச்சனைக்கு இந்த நற்செய்தியின் மூலமாகத் தீர்வு காண்பதற்கு முன்பாக அந்தப் பிரச்சனையின் இன்னொரு பக்கத்தையும் நாம் கவனிக்க வேண்டும். பரலோகத்தில் உனக்கு எதிராக ஒரு குற்றப்பதிவேடு இருப்பது மாத்திரமல்லாமல், இங்கே பூலோகத்திலே உனக்குள் ஒரு பொல்லாத இருதயமும் இருக்கிறது.*

*எல்லா மனிதர்களின் இருதயமும் கெட்டுப் போனதாயிருக்கிறது என்று கடவுள் வேத வசனங்களின் மூலமாகத் தெளிவாக அறிவித்திருக்கிறார். "எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது" என்று எரேமியா 17:9ல் சொல்லுவதைப் பார்க்கிறோம். வேதவாக்கியத்தில் இன்னொரு இடத்தில், "மனுபுத்திரரின்*

இருதயம் தீமையினால் நிறைந்திருக்கிறது. அவர்கள் உயிரோடிருக்கும் நாளளவும் அவர்கள் இருதயம் பைத்தியங்கொண்டிருக்கிறது" (பிரசங்கி 9:3) என்று வாசிக்கிறோம்.

மேலும் இயேசு கிறிஸ்துவும், தீங்கு யாவும் மனிதனின் இருதயத்திலிருந்துதான் புறப்பட்டு வருகிறது என்று தெளிவாகப் போதித்தார். "மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டு வரும். பொல்லாங்கானவைகளாகிய இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும்" (மாற்கு 7:21-23) என்றார். பாவமானது சூழ்நிலைகளினால் ஏற்படுவதல்ல. அது மனிதனுடைய பொல்லாத இருதயத்திலிருந்தே தோன்றி வருகிறது. உன்னுடைய மிகப்பெரிய பிரச்சனையின் மறுபுறம் இதுதான். சீர்திருத்த முடியாததும், பாவத்தை விரும்புகிறதும், கடவுளை வெறுக்கிறதுமான இருதயமானது கடவுளின் எதிரியாக இருக்கிறது. அது கடவுளின் சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது (ரோமர் 8:7) என்கிறது வேதம்.

வேதம் சொல்லுவதுபோல நான் ஒன்றும் அவ்வளவு பொல்லாதவன் அல்ல என்று நீ நினைப்பாய். ஏனென்றால் உன் இருதயம் உன்னை ஏமாற்றுகிறது. இருதயம் மற்றவர்களை ஏமாற்றுவது மாத்திரமல்லாமல் உன்னையே ஏமாற்றக்கூடிய அளவிற்கு திறமை வாய்ந்தது. நீ மிகவும் மோசமான நிலையில் இருக்கிறாய் என்று கடவுள் சொல்லுவதைக் கொஞ்சமும் மதிக்காமல், நான் ஒன்றும் அவ்வளவு மோசமானவன் அல்ல என்று உன்னை எண்ண வைக்கிறது. ஒருவேளை நீ இன்னும் கொஞ்சம் ஆழமாக சிந்திக்கிறவனாயிருந்தால், உன் இருதயம் கொஞ்சம் இறங்கி வந்து, "நான் ரொம்ப பரிபூரணமானவனல்ல. ஏதோ கொஞ்சம் பரவாயில்லை" என்று கூறி உன்னை திருப்திப்பட்டுக்கொள்ள வைக்கிறது. இப்படி உன்னை நம்ப வைப்பதிலிருந்தே உன்னுடைய இருதயத்தின் போக்கிரித்தனம் தெளிவாகத் தெரிகிறதல்லவா? கடவுள் வெளிப்படுத்தியிருப்பதை உன் மனசாட்சி ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால், அது ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. திரித்துக் கூறுகிறது. பலப் பொய்களை புனைந்து தன்னுடைய மெய்யான நிலையை மறைத்துக்கொள்ளப் பார்க்கிறது. அதுமட்டுமல்ல, கடவுள், விலக்கி வைத்திருக்கிற காரியங்களை செய்வதற்கு மட்டுமே உனக்கு விருப்பமிருக்கிறதல்லவா? கடவுள் கட்டளையாகக் கொடுத்திருக்கிற காரியங்களை வெறுப்பதையும், அவற்றை செய்ய விரும்பாமலும் உன் இருதயம் இருப்பதைப் பார்க்கிறாயல்லவா? இதெல்லாம் கெட்டுப்போன இருதயத்தினால் வரும் விளைவுகள்.

இது ஒரு பிரச்சனையான காரியந்தான். ஏனென்றால் இவ்வளவு பொல்லாத இருதயத்தை வைத்துக் கொண்டு நீ எப்படிப் பரலோகத்தில் வாழ முடியும்? பரலோகமே உனக்கு நரகம் போலாகிவிடுமே?

ஏனென்றால், உன்னுடைய பாவ ஆசைகளுக்குத் தீனி போடக்கூடிய காரியம் எதுவும் அங்கு இருக்காது. கடவுளை ஆராதிப்பதும், அவருக்காக வாழ்வதுமே பரலோகத்தின் வாழ்க்கைமுறை. அந்த வாழ்க்கை உனக்கு அலுப்பாக இருக்குமே. கடவுளையும் அவருடைய சித்தத்தையும் எதிர்க்கிற ஒரு இருதயம் உனக்குள் இருக்கும்போது பரலோகம் உனக்கு ஏமாற்றத்தையும், எரிச்சலையும் மட்டுமே தருமல்லவா? மேலும், அவரை எதிர்க்கும் பாவியான உன்னை அவர் ஒருபோதும் பரலோகத்திற்குள் அனுமதிக்கப் போவதில்லை. பாவங்கள் மன்னிக்கப்பட்டு, இருதயம் பரிசுத்தமாக்கப்பட்டவனையே கடவுள் தன்னுடைய இராஜ்ஜியத்திற்குள் அனுமதிக்கப் போகிறார். அவர் ஒருபோதும் கெட்டுப் போன இருதயத்தை உடைய, தம்மை எதிர்க்கும் பாவிகளை பரலோகத்திற்குள் கொண்டுவரப் போவதில்லை.

உன்னுடைய பிரச்சனையின் இந்தப் பகுதியை மேலும் கடினமாக்குகிற விஷயம் என்ன தெரியுமா? உன்னுடைய இருதயத்தை மாற்ற உன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்பதுதான். "எத்தியோப்பியன் தன் தோலையும், சிவிங்கி தன் புள்ளிகளையும் மாற்றக்கூடுமோ? கூடுமானால் தீமை செய்யப் பழகின நீங்களும் நன்மை செய்யக்கூடும்" (எரே 13:23) என்று வேதவாக்கியம் சொல்கிறது. இந்தக் கேள்விக்கான பதில் "மாற்ற முடியாது" என்பதுதானே. ஒரு மனிதனோ அல்லது ஒரு மிருகமோ தன்னுடைய நிறத்தை மாற்றிக் கொள்ள முடியாது. அது இயற்கையாக ஏற்பட்டது. அதேபோல, பொல்லாத இருதயத்தைக் கொண்டிருக்கிற மனிதர்களால் நன்மை செய்ய முடியாது. ஏனென்றால் அது அவர்களுடைய இயல்புக்கு முற்றிலும் மாறானது. முயற்சி செய்வதால் சில நற்குணங்களை ஏற்படுத்திக் கொள்ள உன்னால் முடியும் என்பது உண்மைதான். ஆனால், உனது உள்ளான இருதயத்தின் குணத்தை முற்றிலுமாக மாற்றி அமைக்க உன்னால் ஒருபோதும் முடியாது. ஒரு மனிதன் மனைவிக்கு விரோதமாக துரோகம் செய்யாமல் இருக்கலாம். ஆனால் அவன் தனது இருதயத்துக்குள் காமத்தை வளர்த்துக் கொண்டிருக்கலாம். ஒரு மனிதன் ஆலயத்துக்கு ஒழுங்காகச் சென்று தசமபாகம் செலுத்துகிறவனாகக்கூட இருக்கலாம். ஆனால் அவன் இருதயமோ கடவுளுக்கு வெகு தூரத்தில் இருக்கக்கூடும். ஒரு பெண் தன் வாயினால் புறங்கூறாமலும், பொய் பேசாமலும் இருக்கலாம். ஆனால் அவள் தன் இருதயத்திலோ வெறுப்பை வளர்த்துக் கொண்டிருப்பவளாகக் காணப்படலாம்.

உன்னுடைய பிரச்சனையை மேலும் சிக்கலாக்குவதில் இது இரண்டாவது விஷயமாயிருக்கிறது. பரலோகத்தில் உனக்கு எதிராக இருக்கின்ற குற்றப் பதிவுகளை உன்னால் மாற்ற முடியாதது மாத்திரமல்லாமல், பூலோகத்திலே உனக்குள் இருக்கின்ற பொல்லாத இருதயத்தையும் உன்னால் மாற்ற முடியாது. இது ஒரு நல்ல செய்தியல்ல. இந்தக் கெட்ட செய்தியை நீ விளங்கிக் கொள்ளாவிட்டால், இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தினால் வருகின்ற நல்ல செய்தியை உன்னால் விளங்கிக் கொள்ள முடியாது. பாவிகளாக, தாங்கள் எவ்வளவு

*பரிதாபகரமான நிலையில் இருக்கிறோம் என்பதை உணர்ந்து கொள்பவர்களுக்கே சுவிசேஷமானது நற்செய்தியாக இருக்கும்.*

## நீக்கப்படும் குற்றப்பதிவேடும், மாற்றப்படும் இருதயமும்!

*கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி என்ன தெரியுமா? கடவுள் தமது சர்வவல்லமையுள்ள கிருபையினாலே, தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக, திரளான பாவிகளின் குற்றப்பதிவேடுகளை நீக்கம் செய்யவும், அவர்களுடைய இருதயத்தை மாற்றவும் சித்தம் கொண்டார் என்பதே.*

*இயேசு கிறிஸ்து, தான் இறக்கப் போவதற்கு சற்று முன்பாக தமது கடைசிப் பந்தியிலே சீஷர்களோடு அமர்ந்திருக்கையில் கூறியதை சற்று சிந்தித்துப் பாருங்கள். அவர் "இந்தப் பாத்திரம் உங்களுக்காக சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது" (லூக்கா 22:20) என்றார். தன்னுடைய ஊழியத்தின் நோக்கத்தை மிகவும் சுருக்கமாக இரண்டே வார்த்தையில், புதிய உடன்படிக்கை என்று விளக்கினார். அவர் பூலோகத்தில் வந்து செய்த யாவும் இந்தப் புதிய உடன்படிக்கை ஸ்தாபிக்கப்படுவதற்கு காரணமாயிருந்தது. அவர் தம்மைத் தாமே வெறுத்ததும், தமது மகிமையின் சாயலை இழந்து பாவமனிதனுடைய சாயலைத் தரித்துக் கொண்டதும், இவ்வுலகில் தமது பாவமற்ற வாழ்க்கையை நிறைவேற்றியதும், தமது ஜனங்களுக்கு பதிலாக அவர்களின் பாவங்களுக்காகத் தான் மரிக்கப் போவதும், அதற்குப் பிறகு உயிர்த்தெழப் போவதுமாகிய நிகழ்வுகளின் மூலமாக அவர் இந்த புதிய உடன்படிக்கையை ஸ்தாபிப்பதாக அறிவித்தார்.*

*இந்தப் புதிய உடன்படிக்கையின் மூலமாகக் கடவுள் என்ன வாக்கு கொடுக்கிறார் தெரியுமா? இந்தப் புதிய உடன்படிக்கையில் அடங்கியுள்ளவைகளை வேதம் நமக்கு பின்வருமாறு விளக்குகிறது: "நான் பண்ணப் போகிற உடன்படிக்கையாவது: நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் . . . நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்" (எரே 31:33-34) என்று கர்த்தர் சொல்லுகிறார்.*

*இந்தப் புதிய உடன்படிக்கையானது இரண்டு ஆசீர்வாதங்களை முக்கியமாகக் கொண்டிருக்கிறது.*

1. *முதலாவது, கடவுள் தமது ஜனங்களுடைய பாவங்களையும் அக்கிரமங்களையும் இனிமேல் நினைக்க மாட்டேன் என வாக்குக் கொடுக்கிறார். வேறுவிதமாக சொல்வோமானால், அவர்களுடைய குற்றப்பதிவேடுகளை அவர் நிரந்தரமாக அழித்துவிடுவார். அவர்களுடைய பாவங்களை இனிமேல் அவர்களுக்கு எதிராக வைத்துக் கொண்டிருக்க மாட்டார்.*

*அவருடைய நியாயஸ்தலத்திலே அவருடைய ஜனங்களின் குற்றங்கள் முற்றிலுமாக நீக்கப்பட்டுவிடும்.*

2. *இரண்டாவதாக, தமது சட்டதிட்டங்களை தம் ஜனங்களுக்குள்ளாகவே பதித்து வைத்துவிடுவதாக வாக்குக் கொடுக்கிறார். அதை அவர்கள் இருதயத்திலே எழுதிவிடுவதாக வாக்களிக்கிறார். புதிய உடன்படிக்கையில் கடவுள் அவர்களுடைய இருதயத்தையே மாற்றுகிறார். ஒரு காலத்தில் அவருடைய கட்டளைகளை வெறுத்து ஒதுக்கித் தள்ளினவர்களே, இருதயம் மாற்றப்பட்டதால் அவர் கட்டளைகளின் மீது ஆவலாகவும் அதற்கு கீழ்ப்படிபவர்களாகவும் மாற்றம் அடைகிறார்கள். கடவுளுக்கு எது பிரியமோ அதன் மீது இவர்களுக்கும் இப்போது பிரியம் ஏற்படுகிறது. கடவுள் வருத்தப்படுகிற விஷயங்களுக்காக இவர்களும் வருந்துகிறார்கள். மேலும், கடவுளுடைய கட்டளைகளை அவர்கள் ஆர்வத்தோடு கடைப்பிடிக்கும் விதமாக அது அவர்களுடைய இருதயத்திலே எழுதப்படுகிறது. அதுமாத்திரமல்ல, அவர்கள் தங்களுடைய பூலோக வாழ்க்கை முடிவுபெறும் வரைக்கும் அதை மேலும் மேலுமாக கடைப்பிடிக்கவும், பரலோகத்தில் பிரவேசிப்பதற்கு தங்களைப் பூரணப்படுத்தும் விதமாக அதைக் கடைப்பிடிப்பதற்கும் தேவன் தமது மிகுந்த வல்லமையினாலே அவர்களுக்கு உதவி செய்கிறார்.*

*ஆகவே, இந்தப் புதிய உடன்படிக்கையில் கடவுள், தமது ஜனங்களின் நியாயாதிபதியாக இருந்து அவர்களுடைய குற்றப்பதிவுகளைத் தள்ளுபடி செய்கிறார். ஒரு வைத்தியனாக செயல்பட்டு, பாவத்தினால் நோயுற்றிருந்த அவர்களுடைய இருதயத்தைக் குணப்படுத்தி அதை மாற்றுகிறார். நற்செய்தி இதுதான்: கடவுளின் மிகுந்த கிருபையினாலே ஒருவனுடைய குற்றப்பதிவுகள் நீக்கப்படவும், அவன் இருதயமானது முற்றிலும் மாற்றப்படவும் கூடிய வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஒருவன் செய்ய வேண்டியது, இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அவர் மூலமாக கடவுளிடம் வரவேண்டியது மட்டுமே. இது ஒன்று மட்டுமே மனிதனுடைய மாபெரும் பிரச்சனையைத் தீர்க்க முடியும்.*

## பிரச்சனைக்குத் தீர்வு

*இவற்றையெல்லாம் பார்க்கிறபோது உனக்கு என்ன தோன்றுகிறது? உன்னுடைய குற்றப்பதிவேட்டில் இன்னும் அதிகமான குற்றங்கள் பதிவு செய்யப்பட்டுவிடாதபடிக்கு, இன்று முதல் என் வாழ்க்கையை மாற்றிக் கொள்வேன் என்று தீர்மானித்து அதன்படி நடக்க முயற்சிப்பது இதற்கு சரியான தீர்வு அல்ல என்பதை நீ முதலாவதாக ஞாபகத்தில் வைக்க வேண்டும். அப்படிச் செய்வது, சுவிசேஷ செய்தி அல்ல! நீ எத்தனை*

முயற்சிகள் எடுத்து உன் வாழ்க்கையை சரிப்படுத்திக் கொள்ளப் பார்த்தாலும், பரலோகத்தில் மலை போல் குவிந்து கிடக்கின்ற உனது குற்றங்களோடு ஒரு சிறு கரும்புள்ளியாவது கூடிவிடாதபடி கவனமாக வாழப் பார்த்தாலும், உனது கடந்த கால பாவங்களின் பதிவுகள் அங்கே ஒரு எழுத்தும் மாறாமல் அப்படியேதான் இருக்கும். ஏற்கனவே இருக்கின்ற பாவங்களோடு எதுவும் சேர்ந்துவிடாதபடிக்கு கவனமாக நீ இருந்தாலும், உனது கடந்தகால பாவங்களே உன்னை நரகத்திற்குள் தள்ளிவிட போதுமானதாயிருக்குமல்லவா? "உன்னையே மாற்றிக் கொண்டு இனிமேல் நல்லவனாக வாழ்" என்பது இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷ செய்தியல்ல.

"இயேசுவுக்காக வாழப் போவதாகத் தீர்மானித்துக் கொண்டு, அவரைப் பின்பற்று" என்பதும் சுவிசேஷ செய்தியல்ல. பொல்லாத ஒரு இருதயத்தை வைத்துக் கொண்டு உன்னால் அப்படி வாழமுடியாது. அதுதான் பிரச்சனையே. உன்னுடைய பொல்லாத இருதயமானது உன்னைப் பிரியப்படுத்தத்தான் ஒத்துழைக்குமே தவிர, இயேசு கிறிஸ்துவைப் பிரியப்படுத்த ஒத்துழைக்காது. நீ இருக்கிறபடியே இருந்து கொண்டு இயேசுவைப் பின்பற்ற உன்னால் முடியாது. நீ மாற்றம் அடைய வேண்டும். உனக்குள்ளாகவே நீ மாறவேண்டும். உனக்கு ஒரு புது இருதயம் ஏற்பட வேண்டும்.

மேலும், "இயேசு கிறிஸ்துவைக் குறித்ததான சில காரியங்களை நீ விசுவாசி. அவர் பாவிகளுக்காக மரித்தார் என்பது போன்ற காரியங்களை விசுவாசி. பிறகு ஒரு ஜெபம் பண்ணிவிட்டு, அவர் மேல் நம்பிக்கையாயிரு. அது போதும்" என்பதுவும் சுவிசேஷ செய்தியல்ல. அது சுவிசேஷ அழைப்பே இல்லை!

"இயேசுவிடம் வா!" என்பதே சுவிசேஷ அழைப்பாகும். புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தர் அவர்தான் (எபி 12:2-4). அவரிடம் வருவதன் மூலமாகத்தான் புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். என்னை இரட்சியும் என்று அவரிடம் வேண்டிக் கொள். அவருக்கு எதிராக நடந்து கொண்டதை அவரிடம் அறிக்கையிடு. அவருடைய கட்டளைகளை எத்தனையோ முறை மீறி நடந்ததை அவரிடம் ஒத்துக்கொள். வேதவாக்கியங்கள் சொல்லுகிறபடி நான் மிகவும் பாவிதான். நரகத்திற்கு செல்வதற்கே தகுதியுள்ளவன் என்பதை அறிக்கையிடு. உன்னையே இயேசு கிறிஸ்துவுக்கும், அவருடைய இரக்கங்களுக்கும் ஒப்புவி. அவரை உண்மையாகவே நோக்கிக் கூப்பிடுகிறவர்களுக்கு அவர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற புதுஉடன்படிக்கையின் ஆசீர்வாதங்களை வேண்டி, கெஞ்சிக் கேள். உன்னுடைய குற்றப்பதிவுகளை அவர் நீக்கிப் போடவும், உனது இருதயத்தை மாற்றித் தரவும் வேண்டிக்கொள்.

"வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத் 11:28) என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார். உன்னுடைய

குற்றங்களைக் குறித்து நீ மிகுந்த பாரம் உடையவனாயிருக்கிறாயா? உன்னுடைய பொல்லாத இருதயத்தின் நம்பமுடியாத தன்மையை உணர்ந்து தவிக்கிறாயா? உன்னுடைய பிரச்சனை தீர்க்கப்படுவதற்கும், நீ சமாதானத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் இயேசு கிறிஸ்துவிடம் போ. கிறிஸ்து மாத்திரமே புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களை உனக்கு அளிக்க முடியும். அவரே மத்தியஸ்தர். "இரட்சிக்கப்பட விரும்புகிறவர்கள் முன்னாலே வாருங்கள்" என்பதோ, "விசாரணை அறைக்கு வாருங்கள்" என்பதோ, "ஊழியக்காரரை வந்து பாருங்கள்" என்பதோ சுவிசேஷ செய்தி அல்ல. இவை யாவும் வெளிப்பிரகாரமான காரியங்களே. ஆனால் மெய்யான சுவிசேஷ செய்தி என்பது "விசுவாசிப்பதின் மூலமாக இயேசு கிறிஸ்துவிடம் மட்டும் வாருங்கள்" என்று அழைப்பு விடுப்பதே. இதுவே ஆவிக்குரிய காரியம். உன்னுடைய பாவங்களை மன்னித்து, உனக்கொரு புது இருதயத்தைக் கொடுக்குமாறு கிறிஸ்துவினிடம் வேண்டிக்கொள்.

கடவுள் ஒருவனை இரட்சிக்கும்போது, புதிய உடன்படிக்கையின் இரண்டு ஆசீர்வாதங்களையும் சேர்த்துதான் அவனுக்கு அளிக்கிறார் என்பதை நினைவில் வைக்க வேண்டும். கடவுளுடைய கட்டளைகளில் பிரியப்படாமலும், அதைக் கடைப்பிடிக்க மனதில்லாமலும் இருந்து, உனது குற்றங்கள் மாத்திரம் அவரது பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாக கற்பனை செய்து கொள்ளாதபடி எச்சரிக்கையாயிரு. அதற்கு இடமேயில்லை. கடவுள், புதிய உடன்படிக்கையின் ஓர் ஆசீர்வாதத்தை மட்டும் தருகிறவரல்ல. பாவியின் இருதயத்தை மாற்றாமல், அவனுடைய குற்றங்களை மட்டும் அவர் நீக்கிவிட மாட்டார். இருதயம் மாற்றப்படாமல் தொடர்ந்து பழைய பாவ வாழ்க்கையையே வாழ்ந்து, கடவுளின் சித்தத்துக்குக் கீழ்ப்படியாமலும், அதை மதிக்காமலும் வாழ்ந்து, நான் இரட்சிக்கப்பட்டுவிட்டேன், மோட்சம் போய்விடுவேன் என எண்ணிக் கொண்டிருப்பது ஆத்துமாவை அழித்துப் போடுகிற பயங்கரமான கள்ளப்போதனையாகும். பாவத்தின் மீது வெறுப்பையும், எல்லா பாவங்களையும் விட்டுவிடுகிற மனப்போக்கையும் கடவுள் உனக்குத் தந்திராவிட்டால், உன்னை நீயே ஏமாற்றிக் கொள்கிறாய் என்பதுதான் அர்த்தம். உன்னுடைய பொல்லாத இருதயம் இன்னும் உனக்குள்ளே மாற்றமடையாமல் இருக்கிறது. துணிகரமான உன்னுடைய இந்த முட்டாள்தனத்தை மன்னித்து, உனக்கொரு புதிய இருதயத்தைத் உடனடியாகத் தரும்படி கடவுளிடம் மன்றாடிக் கேள்.

மத்தியஸ்தராகிய இயேசு கிறிஸ்து மாத்திரந்தான் உனது மகா பெரிய பிரச்சனை தீர்வதற்கு ஒரே வழி. இந்தப் பெரிய பிரச்சனையை கடவுள் உன் வாழ்வில் தீர்த்திருக்கிறாரா? இயேசு கிறிஸ்துவின் பரிகாரப் பலியின் மூலமாக, உன்னுடைய பாவங்கள் யாவும் நீக்கப்பட்டுவிட்டதென்றும், உன்னுடைய இருதயம் மாற்றப்பட்டுவிட்டதென்றும் அவர் உனக்கு உறுதிப்படுத்தியிருக்கிறாரா? கடவுள் உனக்கொரு புதிய இருதயத்தைத் தந்திருப்பது உன் வாழ்க்கையின் மூலமாக வெளிப்படுகிறதா? இல்லையென்றால் இன்றே கிறிஸ்துவைத் தேடு. புதிய உடன்படிக்கையின்

*மத்தியஸ்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் சென்று கெஞ்சி மன்றாடு. அவருடைய இரக்கத்திற்காக கெஞ்சு. இயேசு கிறிஸ்துவின் பாதத்தில் அடிபணிந்து கேட்பவன் இரக்கம் பெறாமல் ஒரு போதும் அழிந்ததில்லை. உன்னுடைய பாவங்களின் அளவுக்குத்தக்கதான இரக்கம் அவரிடம் உண்டு. ஆனால் அந்த இரக்கம் அவருடைய பாதத்தில் அடிபணிவதில் இருக்கிறதேயொழிய வேறெங்கும் இல்லை என்பதை நினைவில் வையுங்கள்.*

**மொழியாக்கம்: வினோதா சுரேந்தர்** **மொழியமைப்பு: ஆசிரியர்**

**"லூத்தரும், இராஸ்மஸூம் மனித சித்தத்தைப் பற்றி எதிரெதிரான கருத்துக்களோடு ஏன் அத்தனை பெரிய தர்க்கத்தில் ஈடுபட்டனர்? இதற்கான பதிலைத் தேடி நாம் வெகுதூரம் போகத்தேவையில்லை. அவர்கள் இருவருடைய நிலைப்பாட்டிற்கும் காரணம், அவர்கள் இருவரும் கிறிஸ்தவத்தைப் பற்றிய வெவ்வேறான எண்ணப்பாடுகளைக் கொண்டிருந்ததுதான். இராஸ்மஸைப் பொறுத்தவரையில், கிறிஸ்தவ போதனைகளில் எல்லாவற்றுக்குமே சமமான முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்றும், அதனால் மனிதனுடைய சித்தம் சுயாதீனமானதா அல்லது சுயாதீனமற்றதா என்ற ஆராய்ச்சியும் ஏனைய போதனைகளோடு ஒப்பிடும்போது மிகவும் அவசியமற்றது என்றும் நம்பினார். லூத்தரோ, இறையியல் போதனைகள் (சத்தியங்கள்) கிறிஸ்தவத்தில் அடிப்படையானவை என்றும் அவையே கிறிஸ்தவத்தை கிறிஸ்தவமாக்குகின்றன என்றும், அதிலும் பாவத்தால் மனித சித்தம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது என்ற சத்தியம் கிறிஸ்தவ சுவிசேஷத்தின் மூலைக்கல்லாகவும் விசுவாசத்தின் அடித்தளமாகவும் இருக்கிறது என்றும் நம்பினார்."**

**- ஜே. ஐ. பெக்கர், ஓ. ஆர், ஜொன்ஸ்டன்**

# உன்னால் முடியும் தம்பி!

என்ன இப்படியொரு தலைப்பு என்று நினைக்கிறீர்களா? அதை அவசியத்தோடுதான் கொடுத்திருக்கிறேன். கடந்த ஐம்பது வருட காலமாக நம்மினத்தில் சுவிசேஷப் பணியைப் பொறுத்தவரையில் மனிதன் பாவத்தில் இருந்து தன்னை மீட்டுக்கொள்ளவும், பரலோகத்துக்குப் போகவும்கூடிய ஆத்மீக வல்லமையைக் கொண்டிருக்கிறான் என்ற நம்பிக்கையில்தான் பெரும்பாலும் சுவிசேஷப் பணிகள் நடந்து வருகின்றன. அது தவறு என்று நாம் சுட்டிக் காட்டினால், மனிதனுக்கு இதில் பங்கில்லையென்றால் சுவிசேஷம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லையே என்று நம்மைப் பார்த்து எகத்தாளமாகக் கேட்பார்கள். மனிதன் தன்னை இரட்சித்துக் கொள்ளக்கூடிய வல்லமையைக் கொண்டிருக்கிறான் என்ற நம்பிக்கையில் பெரும்பாலானவர்கள் 'உன்னால் முடியும் தம்பி' என்று சுவிசேஷம் சொல்லி வருவதால்தான் இந்தத் தலைப்பில் மிகவும் முக்கியமானதொரு வேதபோதனையை அறிமுகப்படுத்தப் போகிறேன். அந்த வேதபோதனை மனிதனுடைய சித்தத்தின் (The Will of man) தன்மை பற்றியது. மனிதனுடைய சித்தம் என்பதைக் கொஞ்சம் விளக்க முடியுமா? என்று சிலர் கேட்கலாம். அந்தக் கேள்வி அவசியம் தான். ஒரு காரியத்தை மனிதன் செய்வதற்கு அவனைத் தீர்மானிக்க வைக்கும் அவனுடைய இருதயத்தின் பகுதியையே சித்தம் என்று அழைக்கிறோம். இந்த சித்தமே மனிதன் எந்தக் காரியத்தையும் செய்ய வைக்கிறது. இது மனிதனின் இருதயத்தின் ஓர் அங்கம். நம்மிலிருக்கும், பல காரியங்களையும் நாம் சிந்திக்கும் அங்கத்துக்கு மனம் அல்லது இருதயம் என்று பெயர். நாம் ஒரு விஷயத்தை இந்த இருதயத்தின் மூலம் சிந்தித்துப் பார்த்து அந்த விஷயத்தை செய்யத் தீர்மானிக்கும் அங்கத்திற்குத் தான் 'சித்தம்' என்று பெயர்.

இந்த சித்தம், மனிதனில் எத்தகைய தன்மையில் இருக்கிறது, செயல்படுகிறது என்பதைத்தான் நாம் இந்த இதழில் வந்திருக்கின்ற இன்னும் மூன்று ஆக்கங்களில் அலசி ஆராய்ந்திருக்கிறோம். இந்த ஆய்வு மனிதவியலில் ஒரு பகுதி பற்றிய வேத ஆய்வாக இருக்கிறது. இந்த ஆய்வு அத்தனை அவசியமா? என்று நீங்கள் கேட்கலாம். ஏற்கனவே மேலே நான் சொல்லியிருப்பதுபோல் 'உன்னால் முடியும் தம்பி' என்று சிலர் ஆணித்தரமாக சொல்லுவதற்கு காரணம் அவர்கள் ஆவிக்குரிய எந்தக் காரியத்தையும் பாவியான மனிதனால் செய்ய முடியும் என்ற உறுதியான நம்பிக்கையைக் கொண்டிருப்பதால்தான். இந்த நம்பிக்கை வேத அடிப்படையில் அமைந்ததா என்பதைத்தான் நான் விளக்கப்போகிறேன்.

மனித சித்தத்தின் தன்மை பற்றி திருச்சபை ஆரம்பித்த காலத்தில்

இருந்தே விவாதங்கள் இருந்து வந்திருக்கின்றன. இந்த விவாதம் சபை ஆரம்பித்து 5ம் நூற்றாண்டிலேயே ஆரம்பித்து விட்டது. மனித சித்தத்தின் தன்மை பற்றிய விவாதத்துக்கு மூல காரணம் மனிதனைப் பாவம் எந்தவகையில் ஆதாமின் வீழ்ச்சிக்குப் பிறகு பாதித்தது என்பதில் மாறுபாடான எண்ணங்கள் தோன்றியதுதான். 5ம் நூற்றாண்டில் வாழ்ந்த பெலேஜியஸ் (Pelagius) என்ற மனிதன் பாவம் எந்த வகையில் மனிதனைப் பாதித்தது என்பதில் வேதத்திற்கு மாறுபாடான கருத்துக்களைத் தெரிவிக்க ஆரம்பித்தான். பாவம் மனிதனை முழுமையாக, அவனுடைய சகல பாகங்களையும் பாதித்ததா? இல்லையா? என்பதே கேள்வியாக இருந்தது. பெலேஜியஸ், நல்லது கெட்டதை செய்யும்படி சுயமாக செயல்படும் சித்ததை வீழ்ச்சிக்குப் பிறகும் மனிதன் தொடர்ந்து தன்னில் கொண்டிருக்கிறான் என்று விளக்கினான். ஆகவே, வீழ்ச்சியும் (Fall), மூல பாவமும் (Original sin) மனிதனை முழுமையாகப் பாதிக்கவில்லை என்பது பெலேஜியஸின் முடிவாக இருந்தது. இந்தவகையில் சிந்திக்க ஆரம்பித்த பெலேஜியஸ் இறுதியில் மனிதன் பாவியல்ல என்ற முடிவெடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டான்.

பெலேஜியனின் இந்தக் கருத்துக்களை அன்று எல்லோரும் ஏற்றுக்கொள்ளவில்லை. பெலேஜியஸின் பாவத்தைப் பற்றிய போதனைகள் வேத போதனைகளுக்கு அடியோடு எதிராக இருந்தன. அதே காலத்தில் வாழ்ந்த இறையியல் அறிஞராக இருந்த ஆகஸ்தீன் (Augustine) இந்த விஷயம் பற்றி பெலேஜியஸோடு அநேக தர்க்கங்களில் ஈடுபட்டார். பெலேஜியனின் போதனை தவறு என்று சுட்டிக்காட்டி, மனிதனைப் பாவம் முழுமையாகப் பாதித்திருப்பது மட்டுமல்ல அவனுடைய சித்தம் ஆவிக்குரிய காரியங்களை செய்ய முடியாதபடி வலிமையிழந்த நிலையில் இருக்கிறது என்றும் விளக்கினார். திருச்சபை அன்று ஆகஸ்தீனின் போதனையையே ஏற்றுக்கொண்டது. இந்தளவுக்கு இந்த விஷயம் ஏன் பெரிதுபடுத்தப்பட்டது என்று நீங்கள் கேட்கலாம். இந்த விஷயம் சுவிசேஷத்தின் அடித்தளமாக இருப்பதால் தான் ஆகஸ்தீன் இதுபற்றி பெலேஜியஸோடு தர்க்கங்களில் ஈடுபட்டார். மனிதனுடைய சித்தம் பாவத்தால் பாதிக்கப்படாமல் ஆவிக்குரிய தீர்மானங்களை அவன் நினைத்தபடி எடுக்கக்கூடிய நிலையில் இருக்குமானால் கிறிஸ்தவ சுவிசேஷத்துக்கு அவசியமில்லாமல் போய்விடும் என்பதை ஆகஸ்தீன் உணர்ந்திருந்தார். வீழ்ச்சிக்குப் பிறகு ஆவிக்குரிய நிலையை முற்றாக மனிதன் இழந்துபோயிருந்ததாலேயே அவனுடைய ஆவிக்குரிய விடுதலைக்கு சுவிசேஷம் தேவைப்படுகிறது. ஆவிக்குரிய மாற்றத்தை அளிக்கக்கூடிய பெலனுள்ளதாக சுவிசேஷம் மட்டுமே இருக்கிறது. ஆவிக்குரிய மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளும் நிலை மனிதனுக்கு இருந்தால் சுவிசேஷம் வலிமை குறைந்ததாக, இறையாண்மையற்றதாக மாறிவிடும். இதைத் தெளிவாக உணர்ந்தபடியால்தான் ஆகஸ்தீன் பெலேஜியஸினுடைய போதனைக்கு மறுப்புத் தெரிவித்து வேதபோதனையை நிலைநிறுத்த வேண்டிய நிலமை ஏற்பட்டது.

பெலேஜியனுடைய காலத்துக்குப் பிறகு இந்த விஷயம் 16ம்

*நூற்றாண்டில் திருச்சபை சீர்திருத்தத்தை கர்த்தர் ஆரம்பித்தபோது மறுபடியும் தலைதூக்கியது. ரோமன் கத்தோலிக்க போதனை மனித சித்தம் நடுநிலையில்* (Neutral) *நன்மை, தீமை இரண்டையும் சமநிலையில் செய்யக்கூடியதாக இருக்கிறது என்று போதித்தது. அதற்கெதிராக மார்டின் லூத்தர்* (Martin Luther) *'சித்தத்தின் அடிமைத்தனம்'* (The Bondage of the Will) *என்ற நூலை எழுதி வெளியிட்டு மனித சித்தம் பாவத்தால் முழுமையாக பாதிக்கப்பட்டு, மனிதன் ஆத்மீக நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத நிலையில் இருக்கிறான் என்று போதித்தார். இதுவே சீர்திருத்தவாதம் ஆரம்பித்த காலத்தில் அதன் நடுமையமான* (Central) *போதனையாக இருந்தது. லூத்தரைப் பொறுத்தவரையில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தினதும், கிறிஸ்தவத்தினதும் ஆணிவேராக இந்த விஷயத்தைக் கருதினார். லூத்தர் இந்த விஷயத்தில் இராஸ்மஸோடு* (Erasmus) *ஈடுபட்ட தர்க்கங்கள் வரலாறறிந்தவை.*

*சீர்திருத்தவாத காலத்துக்குப் பிறகு 18ம் நூற்றாண்டில் மனித சித்தம் பற்றிய பிரச்சனையை சார்ள்ஸ் பினி* (Charles Finney) *ஆரம்பித்து வைத்தார். மனித சித்தம் பற்றிய அவருடைய தவறான போதனை ஆத்மீக விடுதலைக்காக ஒரு கிறிஸ்தவன் அவிசுவாசிக்கு உதவி கர்த்தரின் இராஜ்யத்துக்குள் அவன் நுழைய உதவ முடியும் என்று நம்ப வைத்தது. இந்த நம்பிக்கையால் சார்ள்ஸ் பினி 'கிறிஸ்துவிடம் வருவதற்கு விருப்பப்படுகிறவர்கள்' என்ற கூட்டத்தை உருவாக்கி அவர்கள் கிறிஸ்துவுக்காக ஆவிக்குரிய தீர்மானம் எடுக்கும் வழிமுறையை* (Anxious Bench) *முதன் முறையாக சபை வரலாற்றில் ஏற்படுத்தினார். இத்தகைய முறையை திருச்சபை அதற்கு முன் அறிந்திருக்கவில்லை. இதுவே பின்பு 20ம் நூற்றாண்டில் பில்லி கிரெகாமால்* (Billy Graham) *'கிறிஸ்துவுக்காக ஆவிக்குரிய தீர்மானம்'* (Decision for Christ) *எடுக்கும் முறையாக சுவிசேஷக் கூட்டங்களில் பயன்படுத்தப்பட்டது. இவர்கள் எல்லோருமே பாவம் எந்தளவுக்கு மனிதனைப் பாதித்திருக்கிறது என்பதிலும், அவனுடைய சித்தத்தின் ஆவிக்குரிய நிலை எப்படியிருக்கிறது என்பதிலும் மாறுபாடான எண்ணங்களைக் கொண்டிருந்ததாலேயே இத்தகைய சுவிசேஷ அழைப்பு முறைகளை உருவாக்கியிருந்தார்கள்.*

*நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் இந்த 21ம் நூற்றாண்டின் நிலை என்ன? பொதுவாகவே கிறிஸ்தவர்கள் மத்தியில் பாவத்தின் நிலை பற்றிய வேதபூர்வமான சிந்தனைகள் அதிகமாக இல்லாமல் இருப்பது நம் காலத்தில் நாம் பார்த்துக்கொண்டிருக்கிற துர்பாக்கியமான நிலையாக இருக்கிறது. நான்காம் நூற்றாண்டிலும் சரி, பதினாறாம் நூற்றாண்டிலும் சரி, அதற்குப் பிறகு பதினெட்டாம் நூறாண்டிலும் சரி பாவத்தைப் பற்றியும், மனித சித்தத்தின் நிலை பற்றியும் வேதத்துக்கு முரணான போதனைகள் எழுந்தபோது ஆவிக்குரிய மனிதர்கள் அவற்றை இனங்கண்டு தோலுரித்துக் காட்டி திருச்சபைக்கு எதிரான ஆபத்துக்களுக்கு எதிராக நின்று வேதபோதனையளித்தார்கள். பதினாறாம் நூற்றாண்டில் இராஸ்மஸ் எடுத்த அதே நிலையையே இன்றைக்கு பொதுவாக கிறிஸ்தவர்கள்*

மத்தியில் காண்கிறோம். இதெல்லாம் நாம் பெரிதாக அலட்டிக்கொள்ள அவசியமில்லாத விஷயங்கள், தொடர்ந்து எந்தவிதமாகவும் சுவிசேஷத்தை சொல்லி பலரும் தேவ இராஜ்யத்துக்குள் வரும்படிப் பார்த்துக்கொண்டால் மட்டும் போதும் என்ற எண்ணப்பாட்டோடு இறையியல் போதனைகளை முற்றிலும் ஒதுக்கித் தள்ளிவிட்டு, வேத சத்தியங்களுக்கு பெரிதும் மதிப்பளிக்காத 'அலட்டிக் கொள்ளாத ஒரு கிறிஸ்தவத்தை' விரும்பி வாழ்ந்துகொண்டிருப்பதைக் காண்கிறோம். இதை சத்துள்ள, வல்லமையுள்ள, ஆவிக்குரிய அப்போஸ்தலர்கள் கால கிறிஸ்தவமாக என்னால் நினைக்க முடியவில்லை. ஆவியின் வல்லமையோடு வாழ்ந்தவர்கள் வேத சத்தியங்களும், போதனைகளும் அவசியமில்லை என்ற எண்ணத்தோடு வாழ்ந்ததாக வரலாறில்லை. கிறிஸ்தவத்தின் ஆணிவேரே வேத சத்தியங்கள்தான். வேத சத்தியங்களுக்கு மதிப்புக்கொடுக்காமலிருந்த காலங்கள் எல்லாம் சபை வரலாற்றில் ஆத்மீக விருத்தியற்ற காலங்களாகவே வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. ஆவியின் வல்லமைக்கும், வேத சத்தியங்களுக்கும் தொடர்பில்லை என்ற எண்ணத்தோடு, வேத போதனைகளை அலட்சியப்படுத்துகின்ற ஆவிக்குரிய எழுச்சியை நாடிப் போய்க்கொண்டிருக்கிற கிறிஸ்தவத்தையே நாம் எங்கும் பரவலாகப் பார்க்கிறோம்.

பாவம் எத்தகையது, ஆதாமீன் வீழ்ச்சி மனிதனை எந்தளவுக்கு பாதித்து கர்த்தரின் பிரசன்னத்தில் இருந்து அவனை அகற்றி நியாயத்தீர்ப்புக்கு ஆளாக்கியிருக்கிறது, பாவத்தால் எந்தவிதத்தில் ஆத்மீக விடுதலைக்காக எதையும் செய்ய முடியாத, இயலாத நிலையில் மனிதன் இருக்கிறான் என்ற வேதவிளக்கங்களை அறியாமல் இருக்கும் திருச்சபை சுவிசேஷத்தின் மகிமையை அறியாமல் தான் இருந்து வரமுடியும். அந்த நிலை நம்மினத்தில் தொடரக்கூடாது என்ற ஆத்மீக வைராக்கியத்தோடும், எண்ணங்களோடும் மட்டுந்தான் இந்த இதழில் மனித சித்தம் பற்றிய ஆக்கம் ஆரம்பமாகிறது. அது உங்களுக்குப் பயனுள்ளதாக இருந்து சுவிசேஷத்தின் அருமையை நீங்கள் உணரச் செய்து ஆத்மீக வாழ்க்கையில் வளரச் செய்யுமானால் அதற்காக கர்த்தருக்கு நான் நன்றி சொல்லுவேன்.

**'மனிதன் முழுமையாகக் கறைபடிந்தவன்' என்பது சுத்தமான உண்மை. அதற்கு அர்த்தம் அவன் நன்மைகளே செய்ய முடியாத மகா கேடு கெட்டவன் என்பதல்ல. இந்த உண்மையைத் தவறாகப் புரிந்துகொள்ளுகிறவர்கள் அப்படித் தவறாக எண்ணிவிடுகிறார்கள். பாவம் மனிதனை முழுமையாகப் பாதித்து ஆவிக்குரிய நன்மைகள் எதையுமே அவன் செய்ய முடியாத நிலையில் வைத்திருக்கின்றது என்பதை மட்டுமே இந்த உண்மை விளக்க முனைகிறது.**

# மனித சித்தம்: வரலாற்று, இறையியல் பின்னணி

### விசுவாச அறிக்கை: சுயாதீனமான சித்தம்

*1689 விசுவாச அறிக்கையில் மனிதனின் சித்தத்தைப் பற்றி விளக்கங்கொடுக்கும் 'சுயாதீனமான சித்தம்' (9ம் அதிகாரம்) என்ற தலைப்பைக் கொண்ட அருமையானதொரு அதிகாரம் இருக்கிறது. இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒரு விளக்க நூல் எழுத வேண்டும் என்று பல வருடங்களுக்கு முன் எனக்கு வாஞ்சை இருந்தது. அதை செய்யும் வாய்ப்பு இதுவரை இருக்கவில்லை. சமீபத்தில் என்னுடைய சபையில் இந்த அதிகாரத்தை நான் ஞாயிறு காலை வேளைகளில் விளக்கிப் போதிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அந்த விளக்கப்போதனைகளை நீங்களும் பெற்றுப் பயனடைய வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் இதை நான் எழுத முனைந்திருக்கிறேன்.*

### வரலாற்று, இறையியல் பின்னணி

*1689 விசுவாச அறிக்கையை அதன் வரலாற்று, இறையியல் பின்னணியின் அடிப்படையில் படித்துப் புரிந்துகொள்ள வேண்டும் என்று நான் அடிக்கடி கூறுவேன். ஏன் தெரியுமா? இந்த விசுவாச அறிக்கை எழுதப்பட்டதற்கு வரலாற்று, இறையியல் காரணங்கள் இருப்பதால்தான். அந்தக் காரணங்களைத் தெரிந்து கொள்ளாமலும், அதன் அடிப்படையில் விசுவாச அறிக்கையைப் படிக்காமலும் விட்டால் சாம்பார், சட்னி இல்லாமல் இட்டிலி சாப்பிட்டது போலாகிவிடும். விசுவாச அறிக்கையின் சுவையை மட்டும் நாம் தெரிந்துகொள்ளாமல் போகப்போவதில்லை, அதன் அழுத்தமான, ஆழமான போதனைகளையும் விளங்கிக் கொள்ள முடியாமல் போய்விடும். அப்படியானால், விசுவாச அறிக்கையின் வரலாற்று, இறையியல் பின்னணி என்ன என்று உடனடியாக நீங்கள் கேட்கப் போகிறீர்கள். அதை விளக்காமல் இருக்க முடியாது.*

*நாம் இப்போது மனிதனின் சித்தத்தைப் பற்றிய விசுவாச அறிக்கையின் போதனையை ஆராய்வதால் முக்கியமாக மனித சித்தம் பற்றிய இந்த ஒன்பதாம் அதிகாரத்தின் வரலாற்று, இறையியல் முக்கியத்துவத்தை நாம் சிந்தித்துப் பார்ப்போம்.*

*(1) மனித சித்தம் பற்றிய இந்த ஒன்பதாம் அதிகாரம் விசுவாச அறிக்கையில் இந்த இடத்தில் அமைந்திருப்பது விசேஷம். 1689 விசுவாச அறிக்கையில் மனிதனுடைய சித்தத்தின் தன்மையை விளக்கும்*

அதிகாரத்திற்கு ‘சுயாதீனமான சித்தம்’ என்பது தலைப்பு (Free Will). மனிதனுடைய சித்தம் எந்தெந்த நிலைகளில் எப்படிச் செயல்படுகிறது என்பதை இந்த அதிகாரம் விளக்குகின்றது. இந்த அதிகாரம் விசுவாச அறிக்கையில் வேதத்தைப் பற்றியும், கடவுளைப் பற்றியும், அவருடைய ஆணையைப் பற்றியும், படைப்பு, பராமரிப்பு, மனிதனின் வீழ்ச்சி, பாவம் ஆகியவை பற்றியும் விளக்கி அதற்குப் பிறகு கடவுளின் உடன்படிக்கையையும், கிறிஸ்துவைப் பற்றியும் எட்டு அதிகாரங்களில் விளக்கிய பிறகு வருகிறது. இந்த அதிகாரத்துக்குப் பிறகு இரட்சிப்பைப் பற்றிய விளக்கங்களை விசுவாச அறிக்கை தர ஆரம்பிக்கிறது. இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கு பற்றிய விளக்கங்களைத் தருவதற்கு முன் மனிதனுடைய சித்தத்தைப் பற்றி இந்த இடத்தில் ஒன்பதாம் அதிகாரத்தில் விசுவாச அறிக்கை விளக்கங்கொடுப்பதை நாம் தற்செயலானதொன்றாக எடுத்துக்கொள்ளக்கூடாது. விசுவாச அறிக்கையில் முப்பத்தி இரண்டு அதிகாரங்களும் ஓர் ஒழுங்குமுறையோடு அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒன்றிற்குப் பிறகு அடுத்த அதிகாரம் ஏன் வருகிறது என்பதற்கு அவசியமான இறையியல் காரணங்கள் இருக்கின்றன. இந்த 9ம் அதிகாரம் இந்த இடத்தில் விசுவாச அறிக்கையில் இருப்பதற்குக் காரணம் இதற்கும் இரட்சிப்புப் பற்றிய போதனைகளுக்கும் பிரிக்க முடியாத பெருந்தொடர்பு இருப்பதால்தான். மனித சித்தத்தின் சுயாதீனம் பற்றிய போதனை சுவிசேஷத்திற்கு அடித்தளமாக இருக்கிறது. இந்தப் போதனையை சரியாகப் புரிந்துகொண்டால் மட்டுமே கிறிஸ்துவின் சுவிசேஷத்தையும், அவர் இலவசமாக அளிக்கும் இரட்சிப்பையும் வேதபூர்வமாக நம்மால் புரிந்துகொள்ள முடியும்.

(2) 16ம் நூற்றாண்டில் திருச்சபை சீர்திருத்தம் ஆரம்பித்தபோது கத்தோலிக்க மதத்திற்கும், சீர்திருத்தவாதிகளுக்கும் இடையில் இருந்த தலையாய இறையியல் கருத்து வேறுபாடு மனிதனுடைய சித்தம் சம்பந்தமானதாக இருந்தது. 16ம் நூற்றாண்டு சீர்திருத்தவாதத்தைப் பற்றி அறிந்திருக்கிறவர்கள் சீர்திருத்தவாதிகளுக்கும், கத்தோலிக்க மதத்திற்கும் இடையிலான அந்தப் போராட்டத்தின் அடிப்படை அம்சம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்று சொல்லுவார்கள். அதில் தவறே இல்லை. இருந்தபோதும் சீர்திருத்தவாதம் ஆரம்பித்தபோது அந்தப் பிரச்சனையோடு ஆரம்பிக்கவில்லை. அதன் ஆரம்பமே மனிதசித்தத்தின் சுயாதீனத்தைப் பற்றிய தர்க்கத்தோடேயே தொடங்கியது. ‘திருச்சபை வரலாற்றை கவனமாக ஆராய்ந்து பார்த்தால் இதுவே லூத்தருக்கும், கத்தோலிக்கத்துக்கும் இடையினான தலையாய இறையியல் பிரச்சனையாக இருந்தது’ என்பதை அறிந்துகொள்ளாம் என்று ஏர்னஸ்ட் ரைசிங்கர் எழுதியிருக்கிறார். ரோமன் கத்தோலிக்க மதம் மனிதன் ஒரே நேரத்தில் நல்லதையும், கெட்டதையும் செய்துவிடக்கூடிய நிலையில் சுயாதீனமான சித்தத்தோடு இருக்கிறான் என்று போதித்தது. அதாவது, ஒன்றுக்கொன்று முரணான காரியங்களை சுயமாகத் தீர்மானித்து செய்யக்கூடிய வல்லமையுடைய சித்தத்தை (Power of contrary choice) மனிதன் கொண்டிருந்ததாகப் போதித்தது. இதன் மூலம் மனிதனுடைய

சித்தம் நடுநிலையில் (Neutral) இருப்பதாக அவர்கள் போதித்தார்கள். ஆனால், மார்டின் லூத்தர் அதை எதிர்த்து மனித சித்தம் சுயாதீனத்தோடு இயங்கவில்லை, அது பாவத்தினால் பாதிக்கப்பட்டு அதற்குக் கட்டுப்பட்டிருப்பதாக விளக்கினார். லூத்தர் மனித சித்தம் பாவத்தால் பாதிக்கப்பட்டு அதனால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை விளக்கி 'சித்தத்தின் அடிமைத்தனம்' (The Bondage of the Will) என்ற நூலை எழுதி வெளியிட்டார். சர்வசாதாரணமாக மனிதன் நன்மையையும், தீமையையும் செய்யக்கூடிய சித்தத்தைக் கொண்டிருக்கிறான் என்று கத்தோலிக்க மதம் வலியுறுத்தியது. லூத்தரைப் பொறுத்தவரையில் இது மிகப் பெரிய தவறு. மனித சித்தம் இயல்பிலேயே நல்லதையும், கெட்டதையும் சர்வசாதாரணமாக செய்யக்கூடிய நிலையிருக்கிறது என்று கூறுவது சுவிசேஷத்தையும், இரட்சிப்பைப் பற்றிய போதனையையும் அடியோடு பாதிக்கின்றது என்று லூத்தர் சொன்னார்.

லூத்தருடைய நண்பனாகவும் அதேநேரம் மனிதநலவாதியும், கல்வியில் சிறந்தவருமாக இருந்த இராஸ்மஸ் இந்த விஷயத்தில் லூத்தரோடு அதிகளவு பொது இடங்களிலும், தனிப்பட்ட முறையிலும் தர்க்கங்களில் ஈடுபட்டார். இராஸ்மஸைப் பொறுத்தளவில் மனித சித்தம் பற்றிய பேச்சே அவசியமற்றதாக இருந்தது. 'மனிதனுக்கு சுயாதீனமான சித்தம் இருக்கிறதா, இல்லையா என்ற பேச்சே அவசியமில்லாதது, பாவம் மனிதனுடைய சித்தத்தைக் கட்டுப்படுத்துகின்றது என்று லூத்தர் எழுதியிருக்கக்கூடாது' என்று ஆணித்தரமாக சொன்னார் இராஸ்மஸ். லூத்தரைப் பொறுத்தளவில் இது வெறும் சாதாரணமான விஷயமல்ல. கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் அத்திவாரத்தையே தகர்த்துவிடக்கூடிய விஷயமாக இதை லூத்தர் கருதினார். இராஸ்மஸுக்கு இதுபற்றி கடிதம் எழுதிய லூத்தர் அதில் இந்தத் தர்க்கத்தை ஆரம்பித்து வைத்ததற்காக இராஸ்மஸுக்கு நன்றி கூறினார். 'இந்த விஷயத்தைப் பற்றிய விவாதத்தை நீ ஆரம்பித்து வைத்திருப்பதால் மற்ற எல்லோரையும்விட சிறந்த மனிதனாக உன்னை நான் காண்கிறேன். இந்த விஷயமே என்னுடைய போராட்டத்தின் பாதையை வழிவகுக்கப்போகிறது. போப்பின் பதவி, உத்தரிக்கும் ஸ்தலம், பாவ மன்னிப்புப் பத்திரங்கள் ஆகிய அம்சங்கள் பற்றிய அநாவசியமான சில்லறை விஷயங்களை வாதத்துக்கு எடுத்துக்கொள்ளாமல் சக்கரத்தை சுழற்றுவதற்கு அச்சாணியாக இருப்பது போன்ற இந்தப் பெரிய விஷயத்தின் அவசியத்தை நீ சரியாக அடையாளம் கண்டு அதைத் தாக்குவதற்கு முன்வந்திருப்பதால் என்னுடைய இதயங்கனிந்த பெரு நன்றியை உனக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்' என்று லூத்தர் எழுதினார்.

லூத்தரின் நூலைப் பற்றிக் குறிப்பிடும் ஜே. ஐ. பெக்கர் பின்வருமாறு எழுதியிருக்கிறார், "லூத்தரின் பேனா முனையில் இருந்து வந்த தலைசிறந்த நூல் 'சித்தத்தின் அடிமைத்தனம்' என்ற நூல்." தன்னுடைய எழுத்துக்களையெல்லாம் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த கெப்பிட்டோ என்பவருக்கு 1537ல் கடிதம் எழுதிய லூத்தர் தன்னுடைய எழுத்துக்கள் அனைத்திலும் சிறுவர்களுக்கான வினாவிடைப் போதனை

(Catechism for the Children), சித்தத்தின் அடிமைத்தனம் (The Bondage of the Will) ஆகிய நூல்களே தம்மைப் பொறுத்தளவில் சிறந்தவை என்றும் அவை எப்போதுமே பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் எழுதியிருந்தார். பாவத்தின் அடிமைத்தனம் என்ற நூலைப்பற்றி இன்னொரு இறையியலறிஞரான பென்ஜமின் வார்பீல்ட், 'தர்க்கத்தில் தலைசிறந்த நூல்' என்று குறிப்பிட்டார். ஜே. ஐ. பெக்கரும், ஓ. ஆர். ஜொன்ஸ்டன் என்பவரும் லூத்தரின் நூலை ஜெர்மன் மொழியிலிருந்து, இலத்தீன் மொழியிலும், ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்தனர். அவர்கள் எழுதிய நூலொன்றில் லூத்தரின் நூலின் முக்கியத்துவத்தை பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்கள். "லூத்தரும், இராஸ்மஸூம் மனித சித்தத்தைப் பற்றி எதிரெதிரான கருத்துக்களோடு ஏன் அத்தனை பெரிய தர்க்கத்தில் ஈடுபட்டனர்? இதற்கான பதிலைத் தேடி நாம் வெகுதூரத்துக்குப் போகத்தேவையில்லை. அவர்கள் இருவருடைய நிலைப்பாட்டிற்கும் காரணம், அவர்கள் இருவரும் கிறிஸ்தவத்தைப் பற்றிய வெவ்வேறான எண்ணப்பாடுகளைக் கொண்டிருந்ததுதான். இராஸ்மஸைப் பொறுத்தவரையில், கிறிஸ்தவ போதனைகளில் எல்லாவற்றுக்குமே சமமான முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்றும், அதனால் மனிதனுடைய சித்தம் சுயாதீனமானதா அல்லது சுயாதீனமற்றதா என்ற ஆராய்ச்சியும் ஏனைய போதனைகளோடு ஒப்பிடும்போது மிகவும் அவசியமற்றது என்றும் நம்பினார். லூத்தரோ, இறையியல் போதனைகள் (சத்தியங்கள்) கிறிஸ்தவத்தில் அடிப்படையானவை என்றும் அவையே கிறிஸ்தவத்தை கிறிஸ்தவமாக்குகின்றன என்றும், அதிலும் பாவத்தால் மனித சித்தம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது என்ற சத்தியம் கிறிஸ்தவ சுவிசேஷத்தின் மூலைக்கல்லாகவும் விசுவாசத்தின் அடித்தளமாகவும் இருக்கிறது என்றும் நம்பினார்."

மனித சித்தத்தின் தன்மை பற்றிய லூத்தருடைய காலத்துக்கு முன்பும் தர்க்கங்கள் நிகழ்ந்திருக்கின்றன. 5ம் நூற்றாண்டளவில் வாழ்ந்த மனிதனாகிய பெலேஜியஸ் (Pelagius) மனிதனுக்கு தன்னை இரட்சித்துக்கொள்ளும் வல்லமை இருக்கிறது என்று நம்பியதால் இறுதியில் மனிதன் பாவியல்ல என்ற முடிவுக்கு வர நேர்ந்தது. பெலேஜியஸூடன் ஆகஸ்தீன் (Augustine) அந்தக் காலத்தில் தர்க்கம் செய்து பெலேஜியனின் போதனை தவறானது என்று சுட்டிக் காட்டினார். பன்னிரெண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு மார்டின் லூத்தர் கத்தோலிக்க மதப் போதனைகளுக்கு எதிராக மனிதனின் சித்தம் பாவத்தால் பாதிக்கப்பட்டு அதற்குக் கட்டுப்பட்டிருக்கிறது என்று விளக்கினார். மனிதனுடைய சித்தம் நல்லதையும் கெட்டதையும் மாறி மாறி சர்வசாதாரணமாக செய்துவிடும் நிலையிலிருக்கிறது என்ற போதனை கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அடியோடு பாதிக்கும் தவறான போதனையாகும்.

பதினெட்டாம் நூற்றாண்டில் மறுபடியும் மனித சித்தம் பற்றிய தவறான போதனைகள் எழாமலில்லை. இந்தக் காலப்பகுதியில் சார்ள்ஸ் பினி (Charles Finney) என்ற மனிதன் மனித சித்தம் பற்றிய தவறான முடிவுகளைக் கொண்டிருந்து சுவிசேஷத்தைக் கறைபடுத்தியிருந்தான்.

சார்ள்ஸ் பினிக்கு முன்பு வாழ்ந்திருந்த பெரும் பிரசங்கியும், வேத அறிஞருமான ஜொனத்தன் எட்வர்ட்ஸ் (Jonathan Edwards) மனித சித்தம் பற்றிய முக்கியமானதொரு நூலை வெளியிட்டார். 'கிறிஸ்தவர்கள் அவசியம் கவனித்து சிந்திக்க வேண்டிய விஷயம் இது' என்று அதில் எட்வர்ட்ஸ் எழுதியிருந்தார்.

மனித சித்தம் பற்றிய தர்க்கங்கள் இன்றைக்கும் தொடர்கின்றன. மனிதனின் சித்தம் பாவத்தால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்ற லூத்தரின் விளக்கத்தை அநேகர் இன்று தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். ஏதோ வேதத்திற்கு எதிரான முடிவெடுக்கும் லூத்தரும் அவரைச் சார்ந்த சீர்திருத்தவாதிகளும் மனித சித்தத்தை அடிமைத்தனத்துக்குள்ளானதாக பாவித்து எழுதியதாக நினைக்கிறவர்கள் அநேகர். உண்மையில் வேதமோ அல்லது 1689 விசுவாச அறிக்கையோ மனித சித்தம் சுயாதீனம் கொண்டதல்ல என்று விளக்கவில்லை. சீர்திருத்தவாதிகள் மனித சித்தம் சுயாதீனமில்லாதது என்ற நம்பிக்கை கொண்டிருப்பதாக நினைப்பவர்கள் மனித சித்தம் பற்றிய சீர்திருத்தவாதப் போதனையை சரியாக விளங்கிக் கொள்ளவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். வேதமும், சீர்திருத்தவாதமும் மனித சித்தம் சுயாதீனமாக இயங்குகிறது என்றுதான் விளக்கின்றன. அதனால்தான் விசுவாச அறிக்கையின் 9ம் அதிகாரம்கூட 'சுயாதீனமான மனித சித்தம்' என்ற தலைப்பைக் கொண்டிருக்கிறது. மனிதன் சுயமாக சிந்தித்து தீர்மானமெடுத்து தனக்குப் பிடித்ததை செய்கிறான் என்பதை நாம் நிச்சயம் நம்ப வேண்டும். அதே நேரத்தில் மனிதன் எந்தவிதமான ஆத்மீக நிலையில் இருக்கிறானோ அந்த நிலைக்கேற்ற வகையிலேயே சுதந்திரத்துடன் இயங்குகிறான் என்பதை விளங்கிக் கொள்வதும் அவசியம்.

## சுயாதீனமான சித்தம், 1689:9

இனி இந்த அதிகாரத்தின் உள்ளடக்கத்தை சுருக்கமாகக் கவனிப்போம். இந்த அதிகாரத்தில் ஐந்து பத்திகள் காணப்படுகின்றன. இந்த ஐந்து பத்திகளில் மனிதனுடைய சித்தத்தின் நிலை பற்றிய வேதமளிக்கும் போதனைகள் தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பத்தியிலும் விளக்கப்பட்டிருக்கும் சத்தியங்களை நிரூபணமாக்கும் வேத வசனங்கள் அதற்குக் கீழ் தரப்பட்டிருக்கின்றன. மேலும் அநேக வேத வசனங்களை ஒவ்வொரு பகுதிக்கும் ஆதாரமாகக் காட்ட முடிந்தபோதிலும் விசுவாச அறிக்கையை எழுதியவர்கள் அவசியமான வசனங்களை மட்டும் கொடுத்து அவற்றின் அடிப்படையில் மேலும் வசனங்களை நாம் இணைத்துப் படிக்கும்படி எதிர்பார்க்கிறார்கள். ஏற்கனவே சொன்னதுபோல இந்த அதிகாரத்துக்கு அவர்கள் 'சுயாதீனமான சித்தம்' என்று தலைப்புக் கொடுத்திருப்பதன் மூலம் அவர்கள் மனித சித்தம் சுயாதீனமாக இயங்குகிறது என்பதை அழுத்தமாக நமக்கு உணர்த்துவதைக் கவனிக்கிறோம்.

***முதலாம் பத்தி:*** கடவுள் இயற்கையிலேயே மனித சித்தத்தை அது

தான் எடுக்கும் தீர்மானத்தின்படி நடக்கக்கூடிய வல்லமையையும் சுதந்திரத்தையும் கொண்டுள்ளதாகப் படைத்திருந்தார். இச்சுயாதீனமான சித்தம் நன்மையையோ, தீமையையோ செய்வதற்கு புற நிர்ப்பந்தங்களினால் பாதிப்புறாமலும் இயற்கையாக அதன் உள்ளியல்பினால் வற்புறுத்தப்படாமலும் உள்ளது.

இந்த அதிகாரத்தின் முதலாவது பத்தி மனிதனின் சுயாதீனமான சித்தத்தின் தன்மையை ஆரம்பத்திலேயே விளக்குகிறது. அதன் மூலம் சுயாதீன சித்தம் என்பது நாம் தனிப்பட்ட முறையில் எந்த விஷயத்தைப் பற்றியும் சுதந்திரமாக எடுக்கும் தெரிவுகளும், தீர்மானங்களும் என்பதை சந்தேகமில்லாதவகையில் விளக்குகிறது. விசுவாச அறிக்கையும், சீர்திருக்க போதனைகளைப் பின்பற்றுகிறவர்களும் மனித சித்தம் சுயாதீனமானது என்பதை மறுக்கிறார்கள் என்ற வாதத்துக்கு இது முற்றுப்புள்ளி வைக்கிறது.

அடுத்து வரும் நான்கு பத்திகளிலும் மனிதனின் சுயாதீனமான சித்தம் அவனுடைய நான்கு ஆவிக்குரிய நிலைகளில் என்னவிதமாக செயல்படுகின்றது என்பதை விளக்குகின்றன. மனிதன் ஏன் சில காரியங்களை தன் வாழ்க்கையில் செய்யச் சித்தங்கொள்ளுகிறான் என்பதை விளங்கிக் கொள்ள அவனிருக்கும் ஆவிக்குரிய நிலை மட்டுமே நமக்கு உதவுகிறது. மனிதனிருக்கும் ஆவிக்குரிய நிலையே அவனுடைய சித்தம் எந்தவிதமான ஒழுக்கத்துக்குரிய தீர்மானங்களை எடுக்க முடியும் என்பதை நிர்ணயிக்கிறது. தானிருக்கும் ஆவிக்குரிய நிலையின் வழிநடத்தலின்படியே எந்த மனிதனும் எதையும் செய்ய சித்தங்கொள்ளுவான்.

**இரண்டாம் பத்தி:** பாவமற்ற நிலையில் மனிதன் சுயாதீனமும் வல்லமையுமுள்ள சித்தத்தையும், நன்மையானதையும் கடவுளுக்கு ஏற்புடையதை செய்யக்கூடிய தன்மையையும் கெண்டிருந்தான். இருந்தபோதும் அவன் மாறும் இயல்புடையவனாக இருந்தபடியால் தனது நேர்மையான நிலையில் இருந்து அவனால் விழ முடிந்தது.

இரண்டாம் பத்தியில் நாம் மனிதன் பாவமற்ற நிலையில், குற்றமில்லாத நிலையில் இருப்பதைக் கவனிக்கிறோம். இந்த நிலையில் மனிதன் கர்த்தருக்கு மகிமை தரும் காரியங்களைச் செய்யச் சிந்தங் கொண்டான். அதேவேளை அவனுடைய சித்தம் விழுந்துவிடக்கூடிய நிலையில் (பாவத்தை செய்துவிடக்கூடிய) இருந்தது.

**மூன்றாம் பத்தி:** மனிதன் பாவத்தில் விழுந்ததால் இரட்சிப்புக்குரிய எந்தவித ஆவிக்குரிய நன்மைகளையும் செய்யக்கூடிய தனது சித்தத்தின் வல்லமையைப் பூரணமாக இழந்தான். இயல்பாகவே மனிதன் ஆவிக்குரிய நன்மைகளை முற்றிலும் எதிர்ப்பவனாகவும் பாவத்தில் மரித்தவனாகவும் உள்ளான்.

இந்த மூன்றாம் பத்தியில் பாவநிலையில் இருக்கும் மனிதனை நாம் பார்க்கிறோம். மனிதன் பாவத்திற்கும் மரணத்திற்கும் உள்ளாகி நிற்கிறான்.

*அவனுடைய சித்தம் பாவத்தால் பாதிக்கப்பட்டு அதற்குட்பட்டு செயல்படக்கூடிய நிலையில் மட்டும் இருக்கிறது. மனிதன் சுயாதீனமாக கர்த்தருக்கெதிரானவைகளை மட்டுமே நாடிச்செய்யக்கூடிய நிலையில் இருக்கிறான்.*

***நான்காம் பத்தி:*** *கடவுள் பாவிக்கு மனமாற்றத்தை ஏற்படுத்தி அவனைக் கிருபையின் நிலைக்குக் கொண்டு வரும்போது, இயற்கையாகவே அவனை அடிமைப்படுத்தியிருக்கும் பாவத்திலிருந்து அவனுக்கு விடுதலை தந்து கிருபையின் மூலமாக மட்டுமே சுயாதீனமான சித்தத்துடன் ஆவிக்குரிய நன்மைகளைச் செய்யும்படிச் செய்கிறார். ஆனால், அவனுள் தொடர்ந்திருக்கும் பாவசுபாவத்தினால் நன்மைகளை மட்டுமன்றி அவன் கேடானவைகளையும் செய்யச் சித்தங்கொள்கிறான். (மனமாற்றமடைந்த மனிதனின் சித்தம் இன்னும் பூரணமடையாவிட்டாலும் அது புதுப்பிக்கப்பட்டுள்ளது. மனமாற்றத்திற்கு முன்பு மனித சித்தம் ஆவிக்குரிய நன்மைகளைச் செய்யக்கூடிய விருப்பத்தையோ வல்லமையையோ கொண்டிருக்கவில்லை).*

*மேல் வரும் நான்காம் பத்தியில் மனிதனை நாம் கிருபையில் நிலையில் காண்கிறோம். இந்நிலையில் மனிதன் மறுபிறப்படைந்து மனமாற்றத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறான். அவனுடைய சித்தம் புதுப்பிக்கப்பட்ட நிலையில் இப்போது நல்லதைச் செய்யக்கூடியதாகவும் பக்திவிருத்திக்குரிய செயல்களை நாடிச் செய்யக்கூடியதாகவும் இருக்கின்றது. கிருபையின் நிலையில் இருக்கும் கிறிஸ்தவன் கர்த்தரை மகிமைப்படுத்தும் காரியங்களில் ஆர்வம் காட்டி அவற்றைச் செய்யக்கூடிய சித்தத்தைக் கொண்டிருக்கிறான். இருந்தபோதும் அவன் இந்நிலையில் பாவத்தோடு தொடர்ந்து போராட வேண்டியிருப்பதால் சில வேளைகளில் கர்த்தருக்கெதிராக சித்தங்கொண்டு அவருக்கு கீழ்ப்படியாமல் இருந்துவிடுகிறான்.*

***ஐந்தாம் பத்தி:*** *உன்னத நிலையிலேயே மனித சித்தம் பூரணமாகவும், மாற்றமெதுவுமின்றி சுயாதீனமாக நன்மையானதை மட்டுமே செய்யக் கூடியதாக அமையும்.*

*ஐந்தாம் பத்தி கிறிஸ்தவனுடைய மகிமையின் நிலையை விளக்குகிறது. இந்நிலையில் கர்த்தரை மகிமைப்படுத்தும் அனைத்தையும் செய்யும் சித்தத்தை கிறிஸ்தவன் கொண்டிருக்கிறான். இந்நிலையில் அவனுடைய சுயாதீனமான சித்தம் கர்த்தருடைய பூரணமான சித்தத்திற்கு சமமான நிலையில் காணப்படுகின்றது.*

வாசகர்கள் திருமறைத்தீப ஆக்கங்களைக் குறித்த தங்களுடைய எண்ணங்களையும் கேள்விகளையும் ஆசிரியருக்கு நேரடியாகவோ அல்லது பத்திரிகையின் பின் பக்கத்திலுள்ள சென்னை முகவரிக்கோ அல்லது இணையதளத்தின் மூலமாகவோ தெரியப்படுத்தலாம். வாசகர்களின் கேள்விகளுக்கு ஆசிரியர் பதிலளிப்பதோடு மற்றவர்களுக்கும் பயன் தரும் கேள்விகளாயிருப்பின் அவைகள் திருமறைத்தீபத்திலும் வெளியிடப்படும். - ***ஆசிரியர்***

# சுதந்திரமாக இயங்கும் மனித சித்தம்

**1689 விசுவாச அறிக்கை** மனிதனுடைய சித்தம் பற்றித் தருகின்ற விளக்கத்தை நாம் விபரமாகக் கவனிக்கப்போகிறோம். இந்த அதிகாரத்தின் முதலாவது பத்தி மனித சித்தத்தின சுதந்திரம் எத்தகையது என்பதைத் தெளிவாக விளக்குகிறது. இந்தப் பகுதி தருகின்ற விளக்கம் ஏனைய பகுதிகளில் கொடுக்கப்பட்டிருக்கும் போதனைகளை விளங்கிக் கொள்ள அவசியமானது.

*1689 வி. அ – 9:1* **"கடவுள் இயற்கையிலேயே மனித சித்தத்தை அது தான் எடுக்கும் தீர்மானத்தின்படி நடக்கக்கூடிய வல்லமையையும் சுதந்திரத்தையும் கெண்டுள்ளதாகப் படைத்திருந்தார். இச்சுயாதீனமான சித்தம் நன்மையையோ, தீமையையோ செய்வதற்கு புற நிர்ப்பந்தங்களினால் பாதிப்புறாமலும் இயற்கையாக அதன் உள்ளியல்பினால் வற்புறுத்தப்படாமலும் உள்ளது."**

## படைப்பில் மனிதனின் சித்தம்

முதலில் மனித சித்தம் அது சிருஷ்டிக்கப்பட்ட நிலையில் (இயற்கையில்) எப்படி இருந்தது என்பதை விசுவாச அறிக்கை விளக்குகிறது. படைப்பில் கர்த்தர் ஆதாமைத் தன்னுடைய சாயலின்படிப் படைத்தார். அதாவது, தன்னுடைய குணாதிசயங்களைப் பிரதிபலிக்கும்படிப் படைத்தார் (ஆதி. 1:26-27). இதன் மூலம் மனிதன் கடவுளாகிவிடவில்லை. கடவுளைப் போன்ற தன்மைகளைக் கொண்டிருக்கவில்லை. ஆனால், கடவுளோடு உறவாடக்கூடிய ஆவியையும், கடவுளைப் போல சிந்தித்து செயல்படக்கூடிய இருதயத்தையும் கொண்டிருந்தான். கடவுள் இறையாண்மையுள்ளவர், அவரை ஒருவரும் படைக்கவில்லை. அவருடைய குணாதிசயங்களைப் பிரதிபலிக்கக் கூடிய நிலையில் படைக்கப்பட்ட மனிதன் இறையாண்மையுடையவனல்ல. கடவுளின் சித்தம் தெய்வீகத்துடன் சுதந்திரமாக செயல்பட்டது. படைக்கப்பட்ட மனிதனின் சித்தமும் சுதந்திரமாக செயல்பட்டபோதும் அது மனித சித்தம் மட்டுமே. கடவுள் இறையாண்மையுள்ளவரானபடியால் அவருடைய சித்தத்தைப் பிரதிபலிக்கும் வகையில் சுதந்திரத்தோடு இயங்கக்கூடிய நிலையில் மனித சித்தம் இருந்தது என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். இதற்காக படைக்கப்பட்ட மனிதன் எந்தவிதத்திலும் படைத்தவராகிவிடவில்லை. படைத்தவரின் சாயலில் இருப்பதால் படைக்கப்பட்டவன் அவருடையதைப் போன்று சுதந்திரமாக இயங்கும் சித்தத்தைக் கொண்டிருந்தான்.

படைக்கப்பட்ட மனிதனின் சித்தம் அவன் எந்தத் தீர்மானத்தையும்

சுயமாக எடுக்கக்கூடிய வல்லமையைக் கொண்டிருந்தாக விசுவாச அறிக்கை விளக்குகிறது. இதையே மனித சித்தத்தின் சுதந்திரம் (Freedom of the Will) என்று சொல்லுகிறோம். இங்கே ஆதாம் படைக்கப்பட்டபோது எத்தகைய சித்தத்தோடு படைக்கப்பட்டிருந்தான் என்பதை விசுவாச அறிக்கை நினைவுறுத்துகிறது. ஆதாம் கர்த்தருடைய சித்தத்தை அறிந்துகொள்ளக்கூடியவனாக படைக்கப்பட்டிருந்தான். அவன் கர்த்தரோடு பூரண ஐக்கியத்தைக் கொண்டிருந்தான். கர்த்தருடைய வார்த்தைகளைக் குறைவில்லாமல் அறிந்துகொள்ளக்கூடிய நிலையில் இருந்தான். அவர் வெளிப்படுத்திய சத்தியங்களைத் தன்னுடைய வாழ்க்கையில் பூரணமாக நிறைவேற்றி பூரண நீதியுடன் வாழ்ந்து வரக்கூடிய வல்லமையைக் கொண்டிருந்தான். கடவுளுடைய கட்டளைகளை சுயமாக சிந்தித்துப் பார்த்து தெளிவாகப் புரிந்துகொண்டு அவற்றை முழு விருப்பத்துடன் நீதியாகச் செய்து முடிக்கக்கூடிய சித்தத்தோடு ஆதாம் வாழ்ந்து வந்தான்.

## மனித சித்தத்தின் சுதந்திரம்

இந்த முதலாவது பத்தி ஆதாமின் சுதந்திரமான சித்தத்தைப் பற்றி மேலும் சில அவசியமான விளக்கங்களைத் தருகிறது. 'இச்சுயாதீனமான சித்தம் நன்மையையோ, தீமையையோ செய்வதற்கு புற நிர்ப்பந்தங்களினால் பாதிப்புறாமலும் இயற்கையாக அதன் உள்ளியல்பினால் வற்புறுத்தப்படாமலும் உள்ளது' என்கிறது விசுவாச அறிக்கை. இதில் முதலாவதாக, மனித சித்தம் நன்மையையோ தீமையையோ செய்வதற்கு புற நிர்ப்பந்தங்களினால் பாதிப்புறாமல் இருப்பதாக பார்க்கிறோம். இந்த உண்மையை நாம் விளங்கிக் கொள்ளுவது அவசியம். புற நிர்ப்பந்தங்களால் பாதிக்கப்படுமானால் மனித சித்தம் சுதந்திரமாக இயங்குகிறது என்று சொல்ல முடியாது. மனிதன் எந்தக் காரியத்தையும் செய்யவேண்டும் என்று தீர்மானித்து செய்கிறபோது அவன் புற நிர்ப்பந்தங்கள் எதனாலும் உந்தப்படாமல் அதைச் செய்கிறான் என்கிறது வேதம். ஆதாம் கர்த்தருடைய வார்த்தைகளைப் பூரணமாகப் பின்பற்றியபோது எதனாலும் உந்தப்படாமல் சுயமாக விருப்பத்துடனும், வைராக்கியத்துடனும் அவற்றை செய்து முடித்தான். கடவுள் தன்னுடைய சித்தத்தை செய்யும்படியாக மனிதனை புறத்திலிருந்து தூண்டிவிடுகிறார் என்றும், அவனுடைய சித்தத்திற்கு எதிராக செயல்படும்படிச் செய்கிறார் என்றும் சிலர் சொல்லுகிறார்கள். அது தவறு என்கிறது விசுவாச அறிக்கை. அவன் எதனாலும் புறத்திலிருந்து தூண்டப்படாமல் சுயமாகத் தான் செய்ய விரும்பியதைச் செய்கிறான் என்பது தான் முழு உண்மை. மனிதன் ஒரு Free agent ஆக இயங்குகிறான்.

அத்தோடு, மனித சித்தம் 'இயற்கையாக அதன் உள்ளியல்பினால் வற்புறுத்தப்படாமலும் உள்ளது' என்கிறது விசுவாச அறிக்கை. இதன் மூலம் வெளிப்புறத்தில் இருந்து வரும் எதனாலும் உந்தப்படாமல் செயல்படுவதோடு, தனக்குள்ளிருந்து எழுகின்ற எதனாலும் வற்புறுத்தப்படாமலும் மனித சித்தம் இயங்குகிறது என்கிறது விசுவாச அறிக்கை. கடவுள் மனிதனை 'ரோபோட்'

போல சாவி கொடுத்து இயங்கும் கருவியாகப் படைத்திருக்கிறார் என்று சிலர் சொல்லுகிறார்கள். அதாவது அவனுடைய ஒழுக்க நடவடிக்கைகளை அவரே, இப்படித்தான் அவன் செயல்பட வேண்டும் என்று தீர்மானித்து அவனுக்குள் நியமித்திருக்கிறார் என்கிறார்கள் சிலர். அத்தகைய தவறான முடிவுகளை விசுவாச அறிக்கை மறுக்கிறது. சுதந்திரத்தோடு மனித சித்தம் இயங்குகிறது என்பதை மேலே நாம் கவனித்த இரண்டு உண்மைகளும் தெளிவாக்குகின்றன. இவற்றின் மூலம் தான் செய்கின்ற எந்த செயலுக்கும் சுற்றுச் சூழலையோ, அல்லது சக மனிதர்களையோ மனிதன் காரணம் காட்ட முடியாது. தான் செய்யும் செயலுக்கு சரீர பலவீனங்களையோ, மனநிலையின் தன்மையையோகூட காரணம் காட்ட முடியாது. எதனாலும் உந்தப்படாமலும், வற்புறுத்தப்படாமலும் சுயமாக விருப்பத்தோடு சிந்தித்து இயங்குகிறதாக மனித சித்தம் இருக்கிறது என்பதை விசுவாச அறிக்கை ஆணித்தரமாக உறுதி செய்கிறது.

மனித சித்தம் பற்றி நாம் இதுவரை பார்த்துள்ள உண்மைகளை விளக்கும் வேதப்பகுதிகளை நாம் ஆராய்ந்து பார்ப்பது அவசியம். உபாகமம் 30:19ல் கர்த்தர், தன்னுடைய வாக்குத்தத்தங்களைக் கொடுத்துவிட்டு ஜனங்களைப் பார்த்து சொல்லுகிறார், 'ஆகையால், நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படி நீ ஜீவனைத் தெரிந்துகொண்டு . . . அவரைப் பற்றிக் கொள்ளுவாயாக' என்கிறார். இந்த வசனங்களில் கர்த்தர் மனிதனைப் பார்த்து ஜீவனையாவது, மரணத்தையாவது தெரிந்துகொள்ளுவது மனிதனின் பொறுப்பு என்பதை வெளிப்படுத்துகிறார். அவற்றைத் தீர்மானிக்கும் பொறுப்பு மனிதனிடமே விடப்பட்டிருக்கிறது. இல்லாவிட்டால் கர்த்தர் அதை அவனிடம் விட்டிருக்க மாட்டார்.

மத். 17:12ல் இயேசு எலியாவைப் பற்றியும் தன்னைப் பற்றியும் விளக்குகிறார். இங்கே, இயேசு, எலியா வந்தபோது அவன் யாரென்று உணராமல் மனிதர்கள் 'தங்களுடைய இஷ்டப்படி அவனுக்கு செய்தார்கள் (கொடுமைப்படுத்தினார்கள்)' என்கிறார். அதாவது, சுயமாக சிந்தித்து எதைச் செய்ய விரும்பினார்களோ அதை எவராலும் நிர்ப்பந்தப்படுத்தப்படாமல் செய்தார்கள் என்பது இதற்குப் பொருள். இதையே இயேசுவுக்கும் அவர்கள் செய்யப்போகிறார்கள் என்பதை இயேசு இதே வசனத்தில் சொல்லுகிறார்.

யாக். 1:14ல், 'அவனவன் தன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு சோதிக்கப்படுகிறான்' என்றிருப்பதை வாசிக்கிறோம். மனிதன் பாவம் செய்கிறபோது தன்னுடைய இருதயத்தில் எழுகின்ற இச்சைகளினாலே, அவற்றை விரும்பி எந்தெந்த முறையில் அவற்றை செய்ய வேண்டுமென்பதைத் தீர்மானித்து யாராலும், எதாலும், உள்ளேயும் புறத்தில் இருந்தும் நிர்ப்பந்தப்படுத்தப்படாமல் தானே முழுப்பொறுப்போடும் செய்கிறான் என்பதை இந்த வசனம் தெளிவாக விளக்குகிறது.

இதுவரை பார்த்த உண்மையையே மத். 12:33-34 வசனங்களில் இயேசு மேலும் விளக்குகிறார். 'மரம் நல்லதென்றால் அதன் கனியும் நல்லதென்றும்

சொல்லுவார்கள். மரம் கெட்டதென்றால், அதன் கனியும் கெட்டதென்று சொல்லுங்கள்; மரமானது அதன் கனியினால் அறியப்படும். விரியன் பாம்புக்குட்டிகளே! நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க, நலமானவைகளை எப்படிப் பேசுவீர்கள். இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்' என்றார். தொடர்ந்து இதை மேலும் விளக்குகின்ற இயேசு (35-37) இறுதியில் 'உன் வார்த்தைகளினாலே குற்றவாளியென்று தீர்க்கப்படுவாய்' என்கிறார். இயேசுவின் இந்த வார்த்தைகள் மனிதனின் செயல்களுக்கு அவனையே பொறுப்பாளியாகக் காட்டுகின்றன. மனிதன் செய்கின்ற நல்ல அல்லது தீய காரியங்களை அவன் சுயமாக சிந்தித்து செய்கிறான் என்பதை மறுபடியும் இந்த வசனங்களின் மூலம் இயேசு உணர்த்துகிறார். மனிதனுடைய சித்தம் இந்த விஷயங்களில் சுதந்திரத்தோடு இயங்குகிறது. யாரும் எதையும் செய்ய வைத்து செய்யாமல் மனிதன் தன்னுடைய இருதயத்தின் வழிப்படி நடந்துகொள்கிறான்.

இதையே மறுபடியும் யோவான் 5:40ல் இயேசு விளக்கி, 'அப்படியிருந்தும் உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை' என்று சொல்லுகிறார். இயேசுவிடம் வருவதற்கு மறுக்கின்ற மனிதர்கள் அப்படி வருவதற்கு சித்தமில்லாமல் இருக்கிறார்கள் என்கிறார் இயேசு. அவர்களுடைய இருதயம் அதற்கு இடங்கொடுக்காமல் இருக்கிறது என்பது மட்டுமே இங்கே காரணமாகக் காட்டப்படுகின்றது. இதன் மூலம் இயேசு அவர்கள் தன்னிடம் வருவதற்கு அவர்களுடைய சித்தத்தைத் தவிர வேறு எதுவும் காரணமாக இருக்கவில்லை என்பதை உணர்த்துவது உங்களுக்குப் புரிகிறதா? அவன் விரும்பினால் அவரிடம் நிச்சயம் வர முடியும். ஆனால், அவரிடம் வருவதற்கு அவனுக்கு சித்தமில்லை என்பதே உண்மை.

இதுவரை நாம் பார்த்தவற்றிலிருந்து நாம் சில உண்மைகளை மனதில் வைத்திருப்பது அவசியமாகிறது.

1. மனிதனுடைய சித்தத்தைப் பற்றி நாம் கொண்டிருக்கும் தவறான எண்ணங்களை நீக்கிக் கொள்ள வேண்டும். மனித சித்தம் பூரணமான சுதந்திரத்தோடு எதையும் சித்தங்கொண்டு செய்கிறது என்ற விசுவாச அறிக்கையின் விளக்கம் வேதபூர்வமானது. இந்த சத்தியத்தை நிராகரிப்போமானால் மனிதனைப் பற்றியும், கர்த்தரைப் பற்றியும், இரட்சிப்புப் பற்றியும் வேதம் போதிக்கும் ஏனைய சத்தியங்களை நாம் குழப்பிவிட்டுவிடுகின்ற ஆபத்து இருக்கின்றது.

2. மனித சித்தம் பூரண சுதந்திரத்தோடு இயங்கவில்லை என்று சொல்லுவது அவனை எதற்கும் பொறுப்பில்லாதவனாக ஆக்கிவிடும். இப்படிச் சொல்வதால் அவன் செய்கின்ற எந்தக் காரியத்துக்கும் அவனைப் பொறுப்பாளியாக்க முடியாமல் போய்விடும். தான் செய்கின்ற அனைத்துக் காரியங்களுக்கும், கிறிஸ்துவை விசுவாசிக்காமல் இருப்பதற்கும், அவனுடைய

*பாவங்களுக்கும், நியாயத்தீர்ப்பை சந்திக்க வேண்டிய நிலைக்கும் அவன் மட்டுமே காரணகர்த்தாவாக இருக்கிறான் என்கிறது வேதம்.*

3. *மனிதன் தான் செய்கின்ற எதற்கும் எதையும், எவரையும் காரணங்காட்ட முடியாது. அவனுடைய குற்றங்களுக்கு யாரையும் காரணம் காட்டிப் பொறுப்பைத் தட்டிக்கழிக்க முடியாது. நாம் எடுக்கும் எல்லாத் தீர்மானங்களுக்கும் நாமே பொறுப்பு. யாரும் நம்மை வற்புறுத்தி நாம் எதையும் செய்வதில்லை. எதையும் பூரண விருப்பத்தோடேயே நாம் செய்கிறோம்.*

## சீர்திருத்த கிறிஸ்தவர்களும், சுயாதீனமான சித்தமும்

*இதையெல்லாம் வாசிக்கின்ற உங்களுக்கு பெரிய ஆச்சரியமாக இருக்கும் என்பது எனக்குத் தெரியும். சீர்திருத்த கிறிஸ்தவத்தைப் பின்பற்றுகிறவர்களெல்லாம் மனித சித்தம் சுதந்திரமாக இயங்குவதில்லை என்று சொல்லித்தான் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்படி அதிரடியாக கட்சி மாறி, மனித சித்தம் பூரண சுதந்திரத்துடன் எதையும் செய்கிறது என்று சொல்கிறீர்களே என்று ஆச்சரியப்படுவீர்கள். அது எனக்குப் புரிகிறது. சீர்திருத்த கிறிஸ்தவ போதனைகளைப் பற்றி பலர் தவறான எண்ணங்களைக் கொண்டிருப்பதற்குக் காரணம் அவர்களுடைய தவறான முடிவுகள் தான். உண்மையில் சீர்திருத்தப் போதனைகளைக் கவனமாகப் படித்து சிந்தித்துப் பார்த்தீர்களானால் வேதபோதனைகளுக்கு அது எத்தனை முக்கியத்துவம் கொடுக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளுவீர்கள். மனித சித்தம் முழு சுதந்திரத்துடன் பூரணமாக இயங்குகிறது என்பதில் எந்த சீர்திருத்த கிறிஸ்தவனுக்கும் சந்தேகம் இருந்ததில்லை. அதைத் தெளிவாக சுயாதீனமான சித்தம் என்ற தலைப்பில் விசுவாச அறிக்கையின் ஒன்பதாம் அதிகாரம் முதல் பத்தி விளக்குகிறது. அதற்குப் பிறகே அது மனிதனின் நான்கு ஆத்மீக நிலைகளில் அவனுடைய சித்தம் செயல்படும் விதத்தை விளக்க ஆரம்பிக்கிறது. மனித சித்தம் பூரண சுதந்திரத்தோடு இயங்குகிறது என்பதை மனிதனின் நான்குவித ஆத்மீக நிலைகளும் மறுக்கவில்லை.*

*அப்படியானால், சீர்திருத்த கிறிஸ்தவர்கள் மனித சித்தம் சுதந்திரமாக இயங்கவில்லை என்று நம்புகிறார்கள் என்ற தவறான எண்ணம் ஏற்படக் காரணம் என்ன என்று நீங்கள் கேட்கலாம். அதற்கு பதிலளிக்க வேண்டியது அவசியம். முதலில், சீர்திருத்த கிறிஸ்தவத்திற்கு எதிரானவர்கள் மனித சித்தத்தின் செயல்முறை பற்றிய தவறான முடிவுக்கு வந்திருப்பதால், அதாவது மனிதன் எந்த நிலையிலும் நன்மை, தீமைகளை சமநிலையில் செய்துவிடக்கூடிய வல்லமையைக் கொண்டிருக்கிறான் என்ற முடிவுக்கு வந்திருப்பதால், சீர்திருத்தப் போதனையைப் பற்றிய தவறான எண்ணத்தைக் கிளப்பிவிட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மனித சித்தத்தின் சுதந்திரத்துக்கும்* (Freedom of Will), *மனிதனின் செயல்திறனுக்கும்* (Abil-

ity of Will) இடையில் உள்ள வேறுபாடு தெரியவில்லை. சீர்திருத்த கிறிஸ்தவம் மனித சித்தம் முழு சுதந்திரத்துடன் இயங்குகிறது என்பதை நிராகரிக்கவில்லை, ஆனால் அது எதையும் செய்துவிடக்கூடிய வல்லமையைக் கொண்டிருக்கிறது என்பதைத்தான் மறுக்கிறது. இரண்டும் ஒன்றல்ல. சுதந்திரத்தையும் (Freedom), செயல்திறனையும் (Ability) ஒன்றாக சிலர் தவறாகக் கருதிவிடுகிறார்கள். ஒன்றைச் செய்யச் சுதந்திரம் இருக்கிறது என்பதற்காக அதைச் செய்யும் வல்லமை இருக்கிறது என்று சொல்லிவிட முடியுமா? எனக்கு இசை பிடிக்கும். அதிலும் வயலின் வாசிப்பது மிகவும் பிடிக்கும். வயலின் வாசிக்க ஆசைப்பட்டு அதைச் செய்ய எனக்கு முழுச்சுதந்திரம் இருக்கிறது. ஆனால், அதைச் செய்வதற்கான செயல்திறமை என்னிடம் துப்பரவாக இல்லை. நான் ஒருபோதும் வயலின் வாசிக்கக் கற்றுக்கொள்ளாததால் அதை என்னால் வாசிக்க முடியாது. அதைச் செய்ய முழுச் சுதந்திரம் இருந்தபோதும், அதை செய்யும் வல்லமை என்னிடம் இல்லை. இதைத்தான் சீர்திருத்தக் கிறிஸ்தவம் திரும்பத் திரும்ப சொல்லி வருகிறது. வேதமும், சீர்திருத்தக் கிறிஸ்தவமும் மனிதனுடைய சித்தத்திற்கு இருக்கும் பூரண சுதந்திரத்தை என்றுமே மறுக்கவில்லை, அதற்கு எல்லாவற்றையும் எல்லா நிலைகளிலும் செய்துவிடக்கூடிய வல்லமை இல்லை என்பதைத் தான் வலியுறுத்துகிறது.

அதுமட்டுமல்லாமல் நம்மத்தியில் இருக்கும் சீர்திருத்தக் கிறிஸ்தவர்களும் ஒரு தவறைச் செய்துவிடுகிறார்கள். மனித சித்தத்தின் இயலாமையை அழுத்தமாக ஆணித்தரமாக சொல்லி வரும் அவர்கள் மனித சித்தத்தின் பூரண சுயாதீனத்தை அந்தளவுக்கு விளக்குவதில்லை. அநேக சீர்திருத்த கிறிஸ்தவர்கள் இதை சரிவரப் புரிந்துகொண்டிருக்கிறார்களா என்பது எனக்கு சந்தேகமாக இருக்கிறது. மனித சித்தம் பற்றிய சத்தியத்தின் ஒருபுறத்தை (Inability of Man) விளங்கிக் கொண்டிருக்கிற அளவுக்கு அதன் மறுபுறத்தை (Freedom of Will) அவர்கள் விளங்கிக் கொள்ளவில்லை என்றுதான் நான் நினைக்கிறேன. சீர்திருத்த கிறிஸ்தவர்கள் இந்தத் தவறைத் திருத்திக் கொள்ள வேண்டியது அவசியம். சத்தியத்தை சத்தியமாக விளங்கிக் கொள்ள வேண்டும். அதில் கொஞ்சத்தையும் தவறவிட்டுவிடக்கூடாது. அமெரிக்காவில் இருக்கும் பாப்திஸ்துகள் மத்தியில் Free Will Baptist என்ற ஒரு பிரிவு இருக்கிறது. இந்தப் பெயரை அவர்கள் வேண்டுமென்றுதான் வைத்திருக்கிறார்கள். ஏன், தெரியுமா? அவர்கள் மனிதனுடைய சித்தம் பூரணமான சுதந்திரத்தோடு இயங்குகிறது என்று நம்புவதால்தான். அதில் ஒரு தவறுமில்லை. ஆனால், அந்த சுதந்திரத்தோடு அவனுக்கு முழு செயல்திறனும் இருக்கிறது என்றும் அவர்கள் நம்புவதைத் தான் வேதம் மறுக்கிறது. இந்த பாப்திஸ்து பிரிவினரின் நம்பிக்கையில் முதலாவதை சீர்திருத்த கிறிஸ்தவர்களாகிய நாமும் நம்புகிறோம். சொல்லப்போனால் ஒருவிதத்தில் நாமும் Free Will Baptist தான். அதாவது முதலாவது கருத்தைப் பொறுத்தளவில். ஆனால் மனிதனுடைய செயல்திறனைப் பொறுத்தளவில் நாம் மார்டின் லூத்தரோடு இணைந்து மனிதனுடைய செயல்திறன் அவனுடைய பாவத்திற்கு அடிமைப்பட்டிருக்கிறது என்பதையும் நம்புகிறோம். அதையே வேதமும் தெளிவாக விளக்குகிறது.

# நன்மையை மட்டும் நாடிச் செய்த சித்தம்

*மனிதன் படைக்கப்பட்டபோது கடவுளின் சாயலுடன் சுதந்திரமாக இயங்கும் சித்தத்தோடு இருந்தான். அவனால் கர்த்தரின் வார்த்தைகளைக் கேட்டு சிந்தித்து தீர்மானங்கள் எடுத்து அதன்படி நடக்க முடிந்தது. சுதந்திரத்தோடு அவனுடைய சித்தம் இயங்கியது. இந்த ஆக்கத்தில் ஆதாமும், ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் எந்த நிலையில் வாழ்ந்தார்கள் என்பதை இன்னும் விபரமாகப் பார்க்கப் போகிறோம். அருமையான ஏதேன் தோட்டத்தில் கர்த்தரோடு இடைவிடாத உறவை வைத்திருந்த நம்முடைய முதல் பெற்றோர்களின் நிலையைப் பற்றி ஆழமாக சிந்தித்துப் பார்ப்பது அவசியமானது. ஏனெனில், அது நமக்கு நம்முடைய நிலையைப் பற்றியும், விசுவாச வாழ்க்கையை நாம் நடத்த வேண்டிய வகையைப் பற்றியும் நடைமுறைப் போதனையைத் தருவதோடு, கிறிஸ்துவின் சுவிசேஷத்தை சரிவரப் புரிந்துகொள்ளவும் பெருந்துணை புரியும். ஆதாமும், ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் பாவமில்லாமல் இருந்த நிலையைப் பற்றி 1689 விசுவாச அறிக்கையின் இரண்டாம் பத்தி பின்வருமாறு விளக்குகிறது.*

***இரண்டாம் பத்தி**: பாவமற்ற நிலையில் மனிதன் சுயாதீனமும் வல்லமையுமுள்ள சித்தத்தையும், நன்மையானதையும் கடவுளுக்கு ஏற்புடையதை செய்யக்கூடிய தன்மையையும் கொண்டிருந்தான். இருந்தபோதும் அவன் மாறும் இயல்புடையவனாக இருந்தபடியால் தனது நேர்மையான நிலையில் இருந்து அவனால் விழ முடிந்தது.*

*ஏதேன் தோட்டத்தில் நமது முதல் பெற்றோர் பாவமற்ற நிலையில் இருந்ததை விசுவாச அறிக்கை ஆரம்பத்திலேயே உணர்த்துகிறது. நாம் முதல் பத்தியில் பார்த்ததுபோல அந்த நிலையில் ஆதாமும், ஏவாளும் சுயாதீனமும் வல்லமையுமுள்ள சித்தத்தைக் கொண்டிருந்தார்கள். மனித சித்தத்தின் சுயாதீனத்தைப் பற்றி முதல் பத்தியில் தெளிவான விளக்கங் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பத்தி அதை மறுபடியும் நினைப்பூட்டுகிறது. ஏதேன் தோட்டத்தில் நமது முதல் பெற்றோர்கள் சுதந்திரமாக இயங்கக்கூடிய சித்தத்தோடு கடவுளுக்கு பணி செய்து வாழ்ந்தார்கள். அத்தோடு அவர்களுக்கு தாங்கள் சித்தங்கொள்ளும் அனைத்தையும் நிறைவேற்றக்கூடிய வல்லமையும் இருந்ததை இந்தப் பத்தி விளக்குகிறது.*

*ஏதேன் தோட்டத்து வாழ்க்கையைப் பற்றி கொஞ்சம் விபரமாகப் பார்ப்போம். கர்த்தர் மனிதனைப் படைத்தபோது அவனை 'செம்மையானவனாக' உருவாக்கினார் என்று பிரசங்கி 7:29 சொல்லுகிறது. செம்மையானவன் என்றால் குற்றமில்லாதவன், நீதியானவன் என்று*

பொருள். எந்தவிதப் பாவமும் இல்லாத குணாதிசயங்களோடும், தன்மையோடும் முதல் பெற்றோர் ஏதேன் தோட்டத்தில் வாழ்ந்தார்கள். ஏதேன் தோட்டத்தில் பாவம் இருக்கவில்லை. அங்கே நன்மையான அனைத்தையும் அவர்கள் முழு இருதயத்தோடும் விரும்பி செய்யச் சித்தங்கொண்டு கர்த்தருடைய வார்த்தைக்கு ஏற்றபடி பூரணமாக அவற்றை நிவேற்றி முதல் பெற்றோர்கள் வாழ்ந்தார்கள். அவர்களால் கர்த்தருடைய வார்த்தையை குறைவில்லாமல் பூரணமாக நிறைவேற்ற முடிந்தது, அதற்குரிய சுயாதீன சித்தத்தையும், வல்லமையையும் அவர்கள் கொண்டிருந்தார்கள். நீதியானதை மட்டுமே அவர்களுடைய இருதயம் வாஞ்சித்தது. நீதியானதை மட்டுமே அவர்கள் நாடிப் போய் செய்யக்கூடிய வல்லமையை அவர்களுடைய சித்தம் கொண்டிருந்தது. ஆதாம், ஏவாளுக்கு ஏதேனில் நன்மையை மட்டுமே செய்யக்கூடியதாக அவர்களுடைய சித்தத்திற்கிருந்த இந்தப் பூரண சுதந்திரமும், வல்லமையும் வீழ்ச்சிக்குப் பிறகு மாறியது. வீழ்ச்சிக்குப் பிறகு சித்தத்தின் பூரண சுதந்திரத்தை அவர்கள் இழக்காவிட்டாலும் நன்மை செய்கிற வல்லமையை அவர்கள் இழந்தார்கள்.

ஏதேனில் இருந்த நிலையில் கர்த்தருக்கு எது பிடிக்காது என்பது நமது முதல் பெற்றோருக்குத் தெரிந்திருந்தது. புசிக்கக்கூடாத கனி இருக்கும் மரத்தைப்பற்றி அவர்களுக்குத் தெளிவாகத் தெரிந்திருந்தது. அதிலிருந்து விலகி நின்று நன்மையானதை மட்டும் விரும்பி சித்தங்கொண்டு நிறைவேற்ற அவர்களால் முடிந்தது. அங்கு பாவமோ, பாவத்தின் ஜாடையோ இருக்கவில்லை. நமது முதல் பெற்றோரிடம் குற்றவுணர்வுக்கு இடமிருக்கவில்லை. குற்றமென்றால் என்னவென்று தெரியாமல் அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். காலையில் எழுந்து நாள் முழுவதும் நன்மையை மட்டுமே அவர்களால் சிந்திக்கவும், செய்யவும் முடிந்தது. முக்கியமானதொரு உண்மையை நான் மறுபடியும் வலியுறுத்த விரும்புகிறேன். நமது முதல் பெற்றோர் நன்மையானதைச் செய்தபோது அவற்றைப் பூரணமாக செய்யக்கூடிய நிலையில் இருந்தனர். பூரணமான ஒழுக்கத்தோடும், நீதியோடும், கர்த்தரோடு பூரணமான உறவோடும், என்றும் அந்த நிலையில் தொடரக்கூடிய சகல வசதியோடும் நமது முதல் பெற்றோர்கள் வாழ்ந்து வந்தார்கள் என்பதை இந்த இரண்டாம் பத்தி விளக்குகிறது. இந்த நிலையை விசுவாச அறிக்கை 'பாவமற்ற நிலை' என்று வர்ணிக்கிறது (State of Innocence). இதுவே ஆதாமின் வீழ்ச்சிக்கு முன்பதான நிலை.

ஏதேனில் இருந்தபோது நமது முதல் பெற்றோரின் சித்தம் நல்லதையும், கெட்டதையும் சமமாக செய்யக்கூடிய சுதந்திரத்தையும், வல்லமையையும் கொண்டிருக்கவில்லை என்பது கத்தோலிக்க மதத்தின் போதனை. பெலேஜியனிச, கத்தோலிக்க மதப்போதனையின்படிப் பார்த்தால் நமது முதல் பெற்றோர் செய்த நன்மைக்கு அவர்கள் காரணமாக இருக்க முடியாது. ஆதாம், ஏவாளின் சித்தத்தின் நிலையைப் பற்றி வேதபூர்வமான எண்ணங்களை நாம் கொண்டிருப்பது அவசியம். விசுவாச அறிக்கை, அவர்கள் நன்மையை மட்டுமே முழு சுதந்திரத்தோடும் வாஞ்சித்து

அன்றாடம் செய்யக்கூடிய வல்லமையோடு இருந்தார்கள் என்கிறது. இதன் மூலம் அவர்களுடைய சித்தத்தின் பூரண சுதந்திரத்தையும் (Absolute Liberty), வல்லமையையும் (Ability) நாம் அறிந்துகொள்ளுகிறோம். விசுவாச அறிக்கையின் முதல் பத்தி இந்தவிதத்தில் தான் சித்தத்தின் சுதந்திரத்தை விளக்குகிறது.

## மாறிவிடக்கூடிய நிலையில் சித்தம்

நன்மை செய்வதற்கான பூரண சுதந்திரத்தையும் வல்லமையையும் நமது முதல் பெற்றோர் கொண்டிருந்து அதை மட்டுமே செய்து வந்தபோதும் அவர்களுடைய சித்தத்தைப் பற்றி விளக்கும் விசுவாச அறிக்கை, 'இருந்தபோதும் அவன் மாறும் இயல்புடையவனாக இருந்தபடியால் தனது நேர்மையான நிலையில் இருந்து அவனால் விழ முடிந்தது' என்கிறது. ஏதேனில் மனிதனின் சித்தத்தைப் பற்றி கவனமாக விளக்குகின்ற விசுவாச அறிக்கை நன்மை செய்யக்கூடிய பூரண சுதந்திரத்தையும் வல்லமையையும் கொண்டிருந்த மனித சித்தம் அந்த நிலையில் இருந்து விழுந்துவிடக்கூடிய நிலையில் இருந்தது என்று விளக்குகிறது.

ஏதேனில் இருந்த நமது முதல் பெற்றோர் நன்மையை மட்டுமே நாடிச் செய்கின்ற பூரணமான சித்தத்தையும் வல்லமையையும் கொண்டிருந்தபோதும் அவர்களுடைய அறிவும், வளர்ச்சியும் பூரணமானதாக இருக்கவில்லை என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். அவர்கள் கர்த்தருடைய அறிவில் வளர வேண்டிய தன்மையைக் கொண்டிருந்தார்கள். காலையில் எழுந்து கர்த்தருடைய வார்த்தைகளைச் சிந்தித்துப் பார்த்து அவற்றை எப்படிக் கவனத்தோடு செய்ய வேண்டும் என்று அவர்கள் விருப்பத்தோடு சிந்தித்துப் பார்க்க வேண்டியிருந்தது. எந்தவிதக் குறைபாடும் இல்லாதிருந்தபோதும், அவர்களுடைய அறிவு வளர்ச்சியும், அனுபவமும் பூரணமானதாக இருக்கவில்லை. ஒவ்வொரு நாளும் நமது முதல் பெற்றோர் அறிவிலும் அனுபவத்திலும் வளர்ந்து கர்த்தரின் சாயலைப் பிரதிபலிக்க வேண்டிய நிலையில் இருந்தார்கள். உண்மையென்னவென்றால், இதில் அவர்களுக்கு குறைபாடு இருக்கவில்லை. இதை அவர்கள் பாவமில்லாமல் முழுப்பரிசுத்தத்தோடு செய்ய முடிந்தது. பாவத்திலிருந்து விடுதலை பெற்று கர்த்தரை விசுவாசிக்கும் ஒருவன் கர்த்தரின் அறிவிலும் அனுபவத்திலும் வளரும்போது அதைப் பாவமுள்ள இருதயத்தோடும், பாவத்தோடு போராடியும் செய்கிறான். ஆனால், நமது முதல் பெற்றோருக்கு பாவமுள்ள இருதயமோ, பாவத்தோடு போராட வேண்டிய நிலையோ அடியோடு இருக்கவில்லை. அவர்கள் எந்தப் போராட்டமும் இல்லாமல் அதேவேளை அறிவிலும், அனுபவத்திலும் வளர வேண்டியிருந்தது. ஆகவே, நமது முதல் பெற்றோரின் சித்தத்தின் நிலையை 'மாறும் இயல்புடையதாக' இருந்தது என்று விசுவாச அறிக்கையில் நாம் வாசிக்கிறபோது அதை விளங்கிக் கொள்ளுவது கஷ்டமாக இருக்காது. அறிவிலும், அனுபவத்திலும் வளர வேண்டிய நிலை நிச்சயம் அந்த விஷயங்களில் பூரணமானதல்ல. தாம் படைக்கப்பட்ட

*நிலையில் தொடர்ந்திருக்க நமது முதல் பெற்றோர் அறிவிலும், அனுபவத்திலும் வளர வேண்டியிருந்தது. அவர்களுடைய சித்தத்தின் முடிவுகளும், அவற்றின்படியான செயல்முறைகளும் அவர்களில் அன்றாடம் மாற்றத்தை ஏற்படுத்தி கடவுளின் சாயலில் வளரும்படிச் செய்தன. தங்களுடைய படைக்கப்பட்ட தன்மைக்கேற்றபடி நமது முதல் பெற்றோர் இதைச் செய்து வந்தனர்.*

*இந்த வகையில் அவர்கள் வளரவேண்டிய தன்மையோடு இருந்ததையே மாறும் இயல்பு என்கிறோம்* (Unstable, changeble)*. இதைப் பற்றி விசுவாச அறிக்கையின் நான்காம் அதிகாரம், 'கடவுள் மற்ற எல்லாப் படைப்புயிர்களையும் படைத்தபின்பு, அறிவுள்ளதும் அழியாததுமான ஆன்மாக்களோடு, ஆணும் பெண்ணுமாக மனித இனத்தை அவருக்காக வாழவேண்டிய வாழ்க்கையைக் கொடுத்துப் படைத்தார். அவர்கள் கடவுளுடைய சாயலில் படைக்கப்பட்டு, அறிவையும் நேர்மையையும், மெய்யான பரிசுத்தத்தையும் கொண்டு, தங்களுடைய இருதயத்திலே எழுதப்பட்டிருக்கும் கடவுளுடைய நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றும் வல்லமையுடையவர்களாய் இருந்தார்கள். அதேவேளை, மாறும் தன்மையுள்ள தங்களுடைய சுயசித்தத்தின் முழுச்சுதந்திரத்தோடு (கட்டுப் பாட்டை மீறும் சுதந்திரம்) பாவம் செய்யக்கூடிய சாத்தியத்துடன்* (Possibility to sin) *வாழ்ந்து வந்தார்கள்' என்று இரண்டாம் பத்தி விளக்குகிறது.*

*இதை விளக்குவதற்கு ஓர் உதாரணத்தைத் தேடுவோமானால் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையை எடுத்துக்கொள்ளலாம். இயேசு பாவமில்லாத பூரணத்துவத்துடன் இருந்தார் என்பதையும், அவர் ஒருபோதும் தன் நிலையில் இருந்து விழுந்துவிடக்கூடிய தன்மையோடு இருக்கவில்லை என்பதையும் மனதில் வைத்துக்கொண்டு அவரை ஆதாம் இருந்த நிலையோடு ஒப்பிட்டுப் பார்ப்பது அவசியம். இயேசு தேவனாகவும், மனிதனாகவும் இருந்தபோதும் இந்த உலகத்தில் சரீரப் பிரகாரமும், அறிவிலும், அனுபவத்திலும் வளர வேண்டியிருந்தது. அவர் ஞானத்தில் வளர்ந்ததாக லூக்கா 2:40, 52 ஆகிய வசனங்களில் வாசிக்கிறோம். அவர் வேத அறிவில் வளர்ந்து கற்றுக்கொண்டவைகளை வாழ்க்கையில் செயல்படுத்துகிற அனுபவத்திலும் வளர்ந்தார் என்று அறிந்துகொள்ளுகிறோம். விசுவாச வாழ்க்கையில், அனுபவத்தில் அவர் சிறுவயதில் இருந்தே வளர்ந்து வந்தார். தன்னுடைய மானுடத்தில் எப்படி பிதாவின் கட்டளைகளை நிறைவேற்றி வாழ்வது என்பதை அவர் கற்றுக்கொண்டு வளர்ந்து முதிர்ந்தார். எப்போதுமே அவர் பூரண சுதந்திரத்துடன் பிதாவின் சித்தத்தை மட்டும் பூரணமாக நிறைவேற்றி வந்தார். இதில் இயேசு எப்போதும் வெற்றியை மட்டுமே அனுபவித்தார். இயேசு பெற்ற வெற்றியை இந்த விஷயத்தில் ஆதாமால் பெறமுடியவில்லை என்பதுதான் பெரிய வித்தியாசம். இயேசு வென்றார், ஆதாம் வீழ்ந்தான். இதைப் பற்றி விளக்கும் ஆதி. 3:6 சொல்லுகிறது, 'அப்பொழுது ஸ்திரியானவள், அந்த விருட்ஷம் புசிப்புக்கு நல்லதும் பார்வைக்கு இன்பமும் புத்தியைத் தெளிவிக்கிறதுக்கு இச்சிக்கப்படத்தக்க*

*விருட்ஷமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்.'*

*பூரணமாக நன்மை செய்யக்கூடிய சுதந்திரமான சித்தத்தையும் வல்லமையையும் கொண்டிருந்த நமது முதல் பெற்றோரால் அந்த நிலையில் இருந்து விழுந்துவிடக்கூடிய 'மாறும் இயல்பு' அவர்களுக்கு இருந்தது. அந்த மாறும் இயல்பினால்தான் அவர்கள் பிசாசினுடைய வலையில் விழுந்து பின்னால் பாவத்தை செய்து தங்களுடைய படைக்கப்பட்ட பரிசுத்த நிலையில் இருந்து விழுந்துவிட முடிந்தது. ஏதேனில் பிசாசும், பாவமும் இல்லாத வரையில் அவர்கள் நன்மையை மட்டுமே நாடிச் செய்து வந்தார்கள். பாவ சிந்தனை அவர்களுக்கு இருக்கவில்லை. சுயமாக பாவத்தை இச்சிப்பதற்கு அவர்களுடைய இருதயத்தில் இடமிருக்கவில்லை; சுற்றியும் பாவமிருக்கவில்லை. காலையில் எழுந்த ஆதாமும், ஏவாளும் "இன்றைக்கு நாம் எப்படியும் பாவத்தை செய்துவிடாமல் வாழ்ந்துவிட வேண்டும்" என்று நினைப்பதற்கு வாய்ப்பிருக்கவில்லை; நினைக்கவுமில்லை. நன்மையானதை நினைத்து அவர்கள் நன்மையே செய்து வந்தார்கள். புசிக்கக் கூடாத கனி மரத்தின் பக்கத்தில் போகாமல், அதைப் பற்றி நினைத்தும் பார்க்காமல் கர்த்தரோடு உறவாடி வாழ்ந்திருந்தார்கள். பிசாசு ஏதேனுக்கு வந்து அவர்களோடு பாவத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தபோதுதான் அவர்களுடைய 'மாறும் இயல்பு' பாவத்தைப் பற்றி முதல் முறையாக எண்ண ஆரம்பித்தது. நன்மையையே இச்சித்து, செய்து வாழ்ந்து வந்தவர்களுக்கு அவற்றிற்கு எதிரானதில் முதல் முறையாக ஆசை ஏற்பட்டது. அந்த ஆசைக்கு அவர்கள் இடங்கொடுத்து புசிக்கக்கூடாத கனியைப் புசித்தபோதுதான் தாங்கள் இருந்த நிலையில் தொடர முடியாதபடி பாவத்தை செய்து அவர்கள் வீழ்ந்தார்கள்.*

**ஏதேனில் ஆதாம் இருந்த நிலையில் அவன் நீதியை விரும்பி, நாடி அதை மட்டுமே செய்கிறவனாக இருந்தான். அவனில் எந்தவித ஆவிக்குரிய குறைபாடும் இருக்கவில்லை. அவனுடைய இருதயத்தை ஒழுக்கக்கேடு பாதிக்கக்கூடிய நிலையில் சுற்றிவர பாவமோ, தீமையோ இருக்கவில்லை. அவனுக்குள்ளும் பாவத்தை நாடக்கூடிய விதத்தில் பாவ இச்சை இருக்கவில்லை. அதனால் ஆதாம் நீதியை மட்டுமே செய்து வாழ்ந்து வந்தான். பிசாசு ஏதேனுக்கு வந்தபிறகுதான் அந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டது. பிசாசின் தீய ஆலோசனைக்கு உடன்பட்டு புசிக்கக்கூடாத கனியைப் புசித்ததால்தான் ஆதாம் பாவத்தில் விழுந்தான். நீதியைச் செய்து வாழ்ந்த ஆதாம் பாவத்தில் விழுந்துவிடக்கூடிய நிலையில் இருந்தான் என்கிறது கர்த்தரின் வேதம் (ஆதி. 3).**

# மனித சித்தம்:
# சில கேள்விகளும் - சில பதில்களும்

## 1. ஆதாம் பாவத்தில் விழுந்தபோது அவனில் இருந்த கடவுளின் சாயலுக்கு என்ன நடந்தது?

*முதல் மனிதனாகிய ஆதாம் கடவுளின் சாயலில் படைக்கப்பட்டான் என்கிறது வேதம். அதாவது, ஆவியும், சரீரமும் கொண்டிருந்து கடவுளோடு நெருக்கமான தொடர்பு வைத்திருக்கவும், கடவுளைப் பிரதிபலிக்கும் வகையிலான தன்மையைக் கொண்டும் ஆதாம் படைக்கப்பட்டிருந்தான் (ஆதி. 1:26-27). அதுவே அவனில் இருந்த கடவுளின் சாயல். அவன் பாவத்தில் விழுந்தபோது அதற்கு என்ன நடந்தது என்பதே கேள்வி. இதுபற்றி எழுதியிருக்கும் ஜோன் கல்வின், 'தான் படைக்கப்பட்டிருந்த நிலையில் இருந்து ஆதாம் வீழ்ந்தபோது கடவுளை நெருங்க முடியாதபடி பிரிக்கப்பட்டான். அவனில் இருந்த கடவுளின் சாயல் முற்றாக மறைக்கப்படாமலோ அல்லது முற்றாக அழிக்கப்படாமலோ போனாலும் அது முழுமையாக கறைபடிந்து போய் அவனுள் இருந்த அனைத்தும் பயப்பட வேண்டியளவுக்கு அங்கவீனமுற்றுப் போயின' என்கிறார்.*

*பாவியாக இருக்கும் மனிதன் தொடர்ந்தும் கடவுளின் சாயலிலேயே இருக்கிறான் என்கிறது வேதம். கடவுளின் சாயலே மனிதனை ஏனைய படைப்புகளில் இருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றது. கடவுளின் சாயலில் அவன் தொடர்ந்திருப்பதனால்தான் அவன் பாவத்தினால் கடவுளை அறியாமல் இருந்தபோதும், ஏதோ ஒன்றை ஆராதிக்க முயற்சிக்கிறான். கடவுளின் சாயலில் இருக்கும் மனிதனை எவரும் நிந்தித்துப் பேசக்கூடாதென்று வேதம் விளக்குகிறது (யாக். 3:9). இவற்றில் இருந்து பாவம் கடவுளின் சாயலை மனிதனில் இருந்து அகற்றிவிடவில்லை என்பதை அறிந்துகொள்ளுகிறோம். இருந்தபோதும் அந்த சாயல் வீழ்ச்சிக்குப் பிறகு மனிதனில் எந்த வகையில் கறைபடிந்து காணப்படுகின்றது என்பதை அறிந்து வைத்திருப்பது மிகவும் அவசியம். கிறிஸ்துவின் சுவிசேஷத்தை சரியாக விளங்கிக் கொள்ளுவதற்கும், பிரசங்கிப்பதற்கும் இந்த அறிவு முக்கியம். ஜோன் கல்வின் சொல்லுவதுபோல் பாவத்தில் இருக்கும் மனிதனின் அத்தனைப் பாகங்களும் பயப்பட வேண்டிய அளவுக்கு சீரழிந்து காணப்படுகின்றன. அவனுடைய இருதயம் பாவத்தால் பாழடைந்து காணப்படுகின்றது. அவனுடைய சித்தமும் (Will) பாவத்தால் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கின்றது என்றார்.*

'கடவுளை மனிதன் விசுவாசிக்க வேண்டும் என்று கடவுள் கட்டளையிட்டிருப்பதால், அவனால் கடவுளை விசுவாசிக்க முடியும்' என்ற நம்பிக்கை சிலருக்கு இருக்கின்றது. அப்படி அவனால் கடவுளை விசுவாசிக்க முடியாதிருந்தால் தன்னை விசுவாசிக்கும்படி கடவுள் கட்டளையிடுவது நியாயமான செயலல்ல என்று அவர்கள் எண்ணுகிறார்கள். இந்த எண்ணம் முதலில் பெலேஜியஸ் என்ற 5ம் நூற்றாண்டைச் சேர்ந்த மனிதனின் மனதில் ஏற்பட்டது. பெலேஜியஸின் இந்தவகையிலான சிந்தனைக்குக் காரணம் ஏதேன் வீழ்ச்சிக்குப் பிறகு மனிதனின் நிலையைப் பற்றி அவன் கொண்டிருந்த நம்பிக்கையே. வீழ்ச்சிக்குப் பிறகு மனிதனுடைய சித்தத்தைப் பாவம் எந்தவகையிலும் பாதிக்கவில்லை என்று பெலேஜியஸ் நம்பினான். அந்தக் காலத்தில் இருந்த இன்னொரு இறையியலறிஞரான ஆகஸ்தீன் பெலேஜியஸின் இந்தப் போதனையை மறுத்து பாவம் மனிதனின் சித்தத்தை முழுமையாகப் பாதித்து கடவுளை அவன் விசுவாசிக்க முடியாத நிலையில் வைத்திருப்பதாக விளக்கினார்.

கடவுளின் சாயலைத் தொடர்ந்து தன்னில் கொண்டிருக்கும் பாவியாகிய மனிதன் தற்போதைய நிலையில் பாவத்தால் பாதிக்கப்பட்ட சித்தத்தைக் கொண்டிருக்கிறான். அவனுடைய சித்தம் வீழ்ச்சிக்கு முன்பு ஆதாம் தன்னில் கொண்டிருந்த சித்தத்தைப் போலல்லாமல் பாவத்தால் கறைபடிந்த, கட்டுப்படுத்தப்பட்ட சித்தமாக இருக்கிறது. பாவ நிலையில் இருக்கும் மனிதன் பாவத்தை மட்டுமே சுதந்திரமாக செய்யக்கூடிய சித்தத்தைத் தன்னில் கொண்டிருக்கிறான். இந்த நிலையில் மனிதனின் சித்தம் சுதந்திரமாக இயங்கவில்லை என்று தவறாக எண்ணிவிடக்கூடாது. அது சுதந்திரமாக இயங்கியபோதும் பாவத்தால் பாதிக்கப்பட்டு இருப்பதால் பாவத்தை மட்டுமே சுதந்திரமாக செய்யக்கூடிய நிலையில் இருக்கிறது. அதனால் ஆவிக்குரிய நீதியான காரியங்களை செய்யமுடியாது. இந்த உண்மையைப் பெலேஜியஸினால் புரிந்துகொள்ள முடியவில்லை. மனிதன் தன்னை விசுவாசிக்க வேண்டும் என்று கடவுள் கட்டளையிட்டிருந்தபோதும் மனிதனால் அவரை விசுவாசிக்க முடியாதபடி அவனுடைய பாவசித்தம் தடைசெய்கிறது என்பதை பெலேஜியஸினால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இன்னுமொரு உண்மையையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். கடவுளின் சாயல் மனிதனில் கறைபடிந்து காணப்பட்டபோதும் மனிதன் தொடர்ந்து மனிதனாகத்தான் இருக்கிறான். அவன் தன்னுடைய மானுடத்தை இழந்து நிற்கவில்லை. மனிதனை கடவுள் ஆரம்பத்தில் பொறுப்புள்ளவனாகப் (responsible) படைத்தார். தன்னுடைய வார்த்தைக்குக் கட்டுப்பட்டு தனக்கு பதிலளிக்க வேண்டியவனாகப் (accountable) படைத்தார். ஆதாம் அந்தப்படியே கடவுளின் சித்தத்தைப் பூரணமாகச் செய்து அவருக்குக் கட்டுப்பட்டு இருந்தான். அவனுடைய பாவம் அவனை முழுமையாகப் பாதித்தபோது, கடவுளுக்குப் பொறுப்புள்ளவனாக அவன் இருக்க வேண்டிய நிலைமையை அது இல்லாமலாக்கிவிடவில்லை. பாவ நிலையில் அவன் தொடர்ந்தும் கடவுளுக்கு கட்டுப்பட வேண்டியவனாகவும், கடவுளுக்கு பதிலளிக்க

*வேண்டியவனாகவும் இருக்கிறான். பாவத்தால் பாதிக்கப்பட்டு அவன் இழந்தது கடவுளின் வார்த்தைக்குக் கீழ்ப்படியக்கூடிய ஆத்மீக வல்லமையையே* (moral ability)*; கடவுளை விசுவாசிக்க வேண்டிய பொறுப்பை அல்ல* (responsibility)*. கடவுளுக்கு அவன் கீழ்ப்படிய வேண்டிய கடமை தொடர்ந்து இருந்தபோதும் அந்தக் கடமையை நிறைவேற்றக்கூடிய வல்லமையை அவன் இழந்து நின்றான். இரட்சிப்புக்குரிய ஆவிக்குரிய காரியங்களை செய்யும் வல்லமை அவனுக்கு இல்லாமலிருக்கிறது என்று 1689 விசுவாச அறிக்கை விளக்குகிறது (அதி. 9, சுயாதீன சித்தம்). இதைப் பெலேஜியஸ் புரிந்துகொள்ளவில்லை. பெலேஜியஸைப் போலவே அநேகர் இன்றும் இதில் விளக்கமில்லாமல் இருக்கிறார்கள்.*

*மனிதன் மனந்திரும்ப வேண்டும் என்று கர்த்தர் கட்டளையிடுகிறார் (அப்போ. 2:38). ஆனால், அந்தக் கட்டளையை நிறைவேற்றும் வல்லமை அவனுக்கு இல்லை (2 தீமோ. 2:25-26). கிறிஸ்துவை அவன் விசுவாசிக்க வேண்டும் என்று கர்த்தர் கட்டளையிடுகிறார் (அப்போ. 16:31). அதைச் செய்ய வேண்டிய பொறுப்பு மனிதனுக்கு இருந்தபோதும் அதைச் செய்வதற்கான வல்லமை அவனுக்கு இல்லாமலிருக்கிறது (யோவான் 6:37, 40, 44). இந்த ஆவிக்குரிய வல்லமையையே கடவுளின் சாயலில் இருக்கும் மனிதன் இழந்து நிற்கிறான். மனிதன் தன்னுடைய இந்த நிலைக்காக கடவுளைக் குறைகூற முடியாது. உதாரணத்திற்கு குடித்துவிட்டு கார் ஓட்டுகிற ஒருவனை எடுத்துக்கொள்ளுவோம். டிராபிக் போலீஸ் அவனைப் பிடித்து வீதி விதிகளை மீறியதற்காக அவனுக்கு தண்டனை சீட்டு கொடுத்தால் போலீஸை அவன் குறைகூற முடியுமா? 'நான் குடித்திருப்பது உனக்குத் தெரியவில்லையா? அந்த நிலையில் நான் செய்த காரியத்துக்கு நான் பொறுப்பில்லை. எனக்கு நீ சீட்டு கொடுக்க முடியாது' என்று அவன் குறைகூற முடியுமா? முடியவே முடியாது. ஏனெனில், குடியில் நிலை தடுமாறி நிற்பதற்கு அவன்தான் பொறுப்பு. அத்தோடு, குடித்திருக்கும் நிலையில் வீதி விதிகளை மீறியதற்கும் அவன்தான் பொறுப்பு. இந்த இரண்டு மீறுதல்களுக்கும் அவனே பொறுப்பு. இதேவகையில்தான், பாவத்தில் விழுந்ததற்கும் மனிதனே பொறுப்பு, பாவ நிலையில் அவன் செய்து வருகின்ற பாவங்களுக்கும் அவனே பொறுப்பு. கடவுள் சகல அதிகாரத்தோடு மனந்திரும்பு என்று மனிதனைப் பார்த்து சுவிசேஷத்தின் மூலம் அழைக்கிறபோது அதைக் கேட்டு, சிந்தித்து பொறுப்போடு நடந்து மனந்திரும்ப வேண்டிய கடமை மனிதனுக்கு இருக்கிறது. அவன் மனந்திரும்ப மறுப்பானானால், அதை அவன் சிந்தித்துப் பார்த்து தன்னுடைய பாவ நிலையில் சுயாதீனமாக நடந்து கர்த்தரின் கட்டளையை நிராகரிக்கிறான். அந்த செயலுக்கு அவனே முழுப் பொறுப்பு. தன்னுடைய செயலுக்கு அவன் கடவுளை குறைகூற முடியாது.*

## 2. பாவம் மனிதனை முழுமையாகப் பாதித்திருக்கின்றது என்கிறது வேதம். அப்படியானால் மனிதன் நன்மைகளே செய்ய முடியாதளவுக்கு மகா கேடுள்ளவனா?

*இரட்சிப்போடு தொடர்புள்ள சத்தியங்களைத் தொகுத்துத் தருகின்ற*

'கிருபையின் போதனைகள்' மனிதனுடைய பாவத்தின் தன்மையை விளக்குகின்றபோது பாவம் அவனை முழுமையாக, அவனில் ஓரிடம் விடாமல் பாதித்து கர்த்தர் முன் பாவியாக நிறுத்தியிருக்கிறது என்கிறது. இதனை ஆங்கிலத்தில் Total Depravity or Total Inability என்று விளக்குவார்கள். Total Depravity என்றால் முழுமையாகக் கறைபடிந்தவன் என்று பொருள். Total Inability என்றால் முழுமையாக செயல் திறனற்றவன் என்று பொருள். இவை இரண்டும் பாவம் மனிதனை எந்தளவுக்கு பாதித்திருக்கின்றது என்பதை விளக்குவதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற பதங்கள். எந்த ஓர் உண்மையையும் விளக்குவதற்கு நாம் வார்த்தைகளைப் பயன்படுத்துகிறோம். அது அவசியம். ஆனால், அந்த வார்த்தைகளும், பதங்களும் என்ன காரியத்துக்குப் பயன்படுத்தப்படுகின்றனவோ அதை மீறி அவற்றைப் புரிந்துகொள்ளுவது தான் தவறு. இந்தப் பதங்கள் எதை விளக்க முயல்கின்றன என்பதைக் கவனத்தில் வைத்து அவற்றை விளங்கிக் கொள்ள வேண்டும்.

'மனிதன் முழுமையாகக் கறைபடிந்தவன்' என்பது சுத்தமான உண்மை. அதற்கு அர்த்தம் அவன் நன்மைகளே செய்ய முடியாத மகா கேடு கெட்டவன் என்பதல்ல. இந்த உண்மையைத் தவறாகப் புரிந்துகொள்ளுகிறவர்கள் அப்படித் தவறாக எண்ணிவிடுகிறார்கள். பாவம் மனிதனை முழுமையாகப் பாதித்து ஆவிக்குரிய நன்மைகள் எதையுமே அவன் செய்ய முடியாத நிலையில் வைத்திருக்கின்றது என்பதை மட்டுமே இந்த உண்மை விளக்க முனைகிறது. அதேபோலத்தான், 'மனிதன் முழுமையாக செயல் திறனற்றவன்' என்ற வரிகளும் ஆவிக்குரிய செயல்கள் எதையும் செய்ய முடியாத நிலையில் மனிதன் இருக்கிறான் என்பதை விளக்குவதற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

பாவ நிலையில் மனிதன் பாவத்தை செய்ய முடியாத வல்லமையைக் கொண்டிருக்கவில்லை (not able not to sin) என்று ஆகஸ்தீன் சொல்லியிருக்கிறார். அவனால் பாவத்தை மட்டுமே செய்ய முடியும். அதை அவன் முழுச் சுதந்திரத்தோடு செய்கிறவனாக இருக்கிறான். அதைச் செய்யக் கூடாதென்று அவனுடைய இருதயம் அவனோடு போராடுவதில்லை. அவனுடைய இருதயமும் பாவ இருதயமாக மாறியிருப்பதால் அது பாவத்தை மட்டுமே தன்னுடைய பாவ இயல்புக்கு ஏற்றபடி நாடுகிறது.

பாவத்தை மட்டுமே செய்யும் இயல்புள்ள மனிதன் நன்மைகளே செய்ய முடியாதளவுக்கு மகா கேடுகெட்டவனா? என்ற சிலரின் கேள்விக்கு நாம் பதிலளிப்பது அவசியம். அதற்கு பதில் உண்மையில் அப்படியில்லை என்பதுதான். முதலில் பாவ நிலையில் இருக்கும் மனிதனால் எதைச் செய்ய முடியாது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அவனால் இரட்சிப்புக்குரிய, ஆவிக்குரிய நன்மைகள் எதையும் செய்ய முடியாது. அதில் ஒரு துரும்பளவுக்குக் கூட அவனால் எதுவும் செய்ய முடியாது. இது வேதம் போதிக்கும் தெளிவான உண்மை. ஆவிக்குரிய எந்தக் காரியத்தை அவன் செய்ய முனைந்தாலும் அவை

பாவத்தால் கறைபடிந்து கடவுளிடம் நெருங்க முடியாத நிலையில் அவன் இருக்கிறான்.

பாவநிலையில் இருக்கும் மனிதன் தொடர்ந்தும் கடவுளின் சாயலில் இருப்பதால் அவனுக்குள் இந்த உலகத்துக்கேற்ற நன்மைகளை செய்ய முடிகின்றது. ஒழுக்கத்துக்கேற்ற சில காரியங்களைக் கர்த்தர் அவனைக் கொண்டு செய்ய வைக்கிறார். அவனால் மற்றவர்கள் மீது கருணை காட்ட முடிகின்றது. பெற்றொர்களில்லாத பிள்ளைகளை வளர்க்க விடுதிகளைக் கட்ட முடிகின்றது. கருணையோடு வைத்தியசாலைகளைக் கட்டி வியாதியுள்ளவர்களைப் பராமரிக்க முடிகின்றது. பல விதங்களில் பணத்தைக் கொடுத்து எத்தனையோ டிரஸ்டுகள் மூலம் கான்சர் போன்ற வியாதிகளுக்கு மருந்து கண்டுபிடிக்க உதவ முடிகின்றது. கடவுளின் சாயலில் இருக்கும் பாவ மனிதன் இதையெல்லாம் செய்யும்படி கர்த்தர் செய்கிறார். இதையெல்லாம் நாம் மறுக்க முடியாது. ஆனால், இத்தனை நல்ல காரியங்களையும் பயன்படுத்தி அவனால் ஆவிக்குரிய எந்த நன்மையையும் அனுபவிக்க முடியாது. 'இத்தனை நல்ல காரியங்களைச் செய்கிறேனே, நிச்சயம் என்னை நீர் பரலோகத்துக்கு உரியவனாக்க வேண்டும்' என்று பாவ மனிதன் கர்த்தரைப் பார்த்து சொல்ல வழியில்லை. பாவ மனிதன் எந்த நன்மையைச் செய்தாலும் தனக்குத் தானே ஆத்மீக விடுதலையைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் ஆவிக்குரிய நன்மைகள் அற்றவனாக இருக்கிறான். ஏசாயா 64:6 சொல்லுகிறது, 'நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போல இருக்கிறோம்; எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது, நாங்கள் அனைவரும் இலைகளைப்போல் உதிருகிறோம், எங்கள் அக்கிரமங்கள் காற்றைப்போல் எங்களை அடித்துக் கொண்டு போகிறது.' பாவ மனிதன் செய்கின்ற அத்தனை நன்மைகளும் கர்த்தருக்கு முன்பு அழுக்கான கந்தைகளாகத் தெரிகின்றன. அவனால் செய்யக்கூடிய இந்தச் சில நன்மைகளையும் அவன் கடவுளின் சாயலில் இருப்பதனாலேயே செய்ய முடிகின்றது. கடவுளின் உதவியால் அவன் செய்கின்ற நன்மைகளை அவர் முன் காட்டி அவனால் ஆத்மீக விடுதலையைப் பெற்றுக்கொள்ள முடியாது. இயல்பில் அவன் ஆத்மீக நன்மைகள் எதுவுமற்றனாக இருக்கிறான். அத்தோடு கடவுள் தன்னுடைய பொதுவான கிருபையின் அடிப்படையில் அவன் கொடூரமான பாவங்களைச் செய்துவிடுவதில் இருந்து அவனைத் தடுக்கிறார். இதற்காக நாம் கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும். பாவ மனிதனை அவனுடைய நிலையில் துப்பரவாக விட்டுவிட்டால் இந்த உலகத்தை நொடியில் அவன் அழித்துவிடுவான். அந்தளவுக்கு பாவம் கொடிதானது.

பாவ நிலையில் உள்ள மனிதன் ஏனைய மனிதர்கள் மீது கருணை காட்டவும், அவர்களுக்கு நன்மைகள் செய்ய முடிந்த நிலையில் இருந்தபோதும் அதேபோல் அவனால் ஆத்மீகக் காரியங்களைச் செய்யவோ, ஆத்மீக விடுதலையை அடையவோ முடியாது. இரட்சிப்புக்குரிய கர்த்தரின் கிருபையில்லாமல் அவனால் கர்த்தரிடம் வருவதற்கு சித்தங்கொள்ள முடியாது. அவனுடைய பாவ சித்தம் கடவுளுடைய துணையில்லாமல் அவரை நேசிக்கும் நிலைக்கு வராது.

### 3. 'இரட்சிப்பு அடைய வேண்டுமென்று ஒரு மனிதன் சித்தங்கொண்டாலும் அவனால் இரட்சிப்பை அடைய முடியாது' என்று சிலர் சொல்லுகிறார்களே, அது சரியா?

*மனிதனுடைய சுயாதீனமான சித்தத்தைப் பற்றிய போதனையை சரியாகப் புரிந்துகொள்ளாதவர்கள் இப்படி நினைப்பதுண்டு. அவர்கள் பாவியாகிய மனிதன் இரட்சிப்படைய வேண்டும் என்று மெய்யாகவே விரும்பினாலும் அவனால் இரட்சிப்பை அடைய முடியாது என்று நம்புகிறார்கள். ஒருவன் இரட்சிப்பை அடைய விரும்பியும் அவனால் அதை அடைய முடியாமலிருப்பது அவர்களுக்கு அநியாயமானதாகத் தெரிகிறது. இதன் காரணமாக அவர்கள், கடவுள்தான் ஏதோ ஒரு விதத்தில் இரட்சிப்படைய விரும்புகிறவர்களை அவர்கள் அதை அடைய முடியாதபடி தடுத்து வைத்திருக்கிறார் என்று தவறாக நினைக்கிறார்கள். இப்படி நினைப்பவர்கள் கர்த்தருடைய இறையாண்மை பற்றிய போதனையும், தெரிந்துகொள்ளுதல் பற்றிய போதனையும் தான் இந்த நியாயமில்லாத காரியத்துக்குக் காரணம் என்று அவற்றைப் புறக்கணிக்கிறார்கள். இதனால் இந்த சத்தியங்களை விளக்கும் விசுவாச அறிக்கையையும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். அத்தோடு, இவர்களால் மனிதன் முழுமையான பாவியாக, எந்தவித ஆத்மீக செயல்களைச் செய்யும் வலலமையில்லாதவனாக இருக்கிறான் என்ற போதனையையும் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. இதெல்லாம் இவர்களுக்கு நியாயமற்றவையாகத் தெரிகின்றது. இவர்கள் நினைப்பில் ஏதும் உண்மையிருக்கிறா என்று பார்ப்போம்.*

*முதலில், ஒருவன் இரட்சிப்படையாமல் இருப்பதற்கு கர்த்தருடைய இறையாண்மையும், தெரிந்துகொள்ளுதலுந்தான் காரணமென்று வேதம் எந்தப் பகுதியிலும் விளக்குவதில்லை. இந்த இரு சத்தியங்களும் நிராகரிக்க முடியாதபடி வேதத்தில் விளக்கப்பட்டிருந்தாலும் மனிதன் சுயமாக கர்த்தரை விசுவாசிக்காமல் போவதற்கு இவை காரணங்களாக வேதத்தில் எங்குமே விளக்கப்படவில்லை. இந்த இரண்டு போதனைகளும் மகா ஞானியும், வல்லவரும், நீதிமானுமாகிய கர்த்தரின் தெய்வீக வல்லமையையும், தெய்வீக சித்தத்தையும் விளக்குகின்றன. அவற்றை குறைந்த அறிவுள்ளவர்களாகிய நாம் சத்தியங்களாக ஏற்று விசுவாசிக்க வேண்டுமே தவிர தத்துவரீதியாக சிந்தித்துப் பார்த்து கர்த்தர் குறைபாடு கொண்ட குணாதிசயங்களைக் கொண்டவராக எண்ணுவதோ அல்லது மனித எண்ணங்களுக்கு ஒத்துப்போவது போல் இவற்றிற்கு விளக்கங்கொடுக்க முனைவதோ ஆபத்தானதும், கர்த்தரின் மகிமையைக் குறைப்பதுமான செயல்கள். அதேபோல் மனிதனின் பாவநிலையைப் பற்றிய விளக்கமான, அவன் பாவத்தால் முழுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறான் என்ற வேத போதனையும் முற்றிலும் சரியானதே. இரட்சிப்பை ஒருவன் அடைய முடியாமல் போவதற்கு இது காரணமல்ல. இது மனிதனின் மெய்யான நிலையை விளக்குகிறது. இதை மறுப்போமானால் சுவிசேஷ செய்தியே தரமிழந்து போய்விடும். மனிதனைப் பற்றிய இந்த உண்மையே சுவிசேஷ செய்தியை மிகவும் வலிமையுள்ளதாக்குகிறது, அவசியமானதாக்குகிறது.*

*மனிதன் பாவத்தால் முழுமையாகப் பாதிக்கப்படாமலிருந்தால் அவனுடைய இரட்சிப்புக்கு சுவிசேஷம் அவசியமில்லை.*

*ஒருவன் இரட்சிப்புக்காக கிறிஸ்துவை விசுவாசிக்க சித்தங் கொள்கிறான் என்று வைத்துக்கொள்ளுவோம். அவனால் இரட்சிப்பை அடைய முடியுமா, முடியாதா? நிச்சயம் இரட்சிப்பு அடைய முடியும் என்றுதான் வேதம் போதிக்கிறது. இப்படிச் சொல்லுவது வேதபோதனைகளுக்கு முரணானதல்ல. இதை எப்படி விளங்கிக் கொள்ளுவது? ஒருவன் இரட்சிப்படைய வேண்டும் என்ற எண்ணத்தில் கிறிஸ்துவை விசுவாசிக்க சித்தங்கொள்ளுகிறபோது, அதை அவன் சுதந்திரமாக சிந்தித்து சித்தங்கொண்டாலும், கர்த்தருடைய துணையில்லாமல் சித்தங்கொள்ளுவதில்லை. பாவ நிலையில் இருக்கும் மனிதனுடைய சித்தம் இயல்பாக கிறிஸ்துவை ஒருபோதும் நேசிக்காது. அந்த இருதயம் கிறிஸ்துவை மெய்யாக நேசிக்க ஆரம்பிக்குமானால் அதற்குக் காரணமே அந்த இருதயத்தில் பரிசுத்த ஆவியானவர் செயல்பட ஆரம்பித்துவிட்டார் என்றுதான் அர்த்தம். கிறிஸ்து வேண்டும் என்கிற, இருதயத்தில் ஏற்படுகின்ற விருப்பத்தை பரிசுத்த ஆவியானவர் மட்டுமே ஒருவனுக்கு கொடுக்க முடியும். பரிசுத்த ஆவியால் தொடப்படாத இருதயத்தில் அந்த எண்ணம் ஏற்படுவதற்கு வழியேயில்லை. பாவி எப்போதும் தன்னுடைய இயல்புக்கேற்ப கர்த்தரைவிட்டு விலகியோடத்தான் பார்ப்பான். பரிசுத்த ஆவியானவரின் செயலைப் பற்றித்தான் இயேசு நிக்கொதேமுவுக்கு யோவான் 3ம் அதிகாரத்தில் காற்றை உதாரணமாகப் பயன்படுத்தி விளக்கினார். ஆவியானவரின் கண்களுக்குப் புலப்படாத செயலே மனித இருதயத்தில் விசுவாசத்துக்குரிய ஜீவனை விதைப்பது என்று இயேசு அங்கே விளக்குகிறார். ஆவியினால் நித்திய ஜீவனுக்குரிய வித்து விதைக்கப்பட்டதற்கான அறிகுறியே ஒரு மனிதன் கிறிஸ்துவை நாடி பாவ மன்னிப்புக்காக ஓடி வருவது என்று வேதம் விளக்குகிறது. கெட்டகுமாரன் கெட்டுச் சீரழிந்து கடைசியில் ஒன்றுக்குமே உதவாத நிலைக்கு வந்தபிறகு அவனுக்கு புத்தி தெளிந்தது (லூக்கா 15:17). அதற்குப் பிறகு அவன் மனந்திரும்பியவனாகத் தன்னுடைய தகப்பனிடம் போனான். இதற்கு என்ன அர்த்தம்? அங்கே 'புத்தி தெளிந்தது' என்ற வார்த்தைகள் அவனில் ஆத்மீக விழிப்பு ஏற்பட்டதை உணர்த்துகின்றன. தன்னுடைய பாவங்களை அவன் உணர்ந்து கர்த்தரை நேசிக்க ஆரம்பித்ததை சுட்டிக் காட்டுகின்றன. அதை அவனுக்குக் கொடுத்தது யார்? இயல்பில் பாவியாக இருந்த அவனுக்கு அந்த எண்ணங்கள் சுயமாக ஏற்பட்டிருக்க வழியில்லை. அப்படியானால் அவன் எப்படி மனந்திரும்பினான்? வரிக்குதிரைக்கு தன்னுடைய உடம்பில் இருக்கும் வரிகளை அழித்துவிட முடியாததுபோல் அவனாலும் தன்னைத் திருத்திக் கொள்ள முடியாது. அவனுக்கு ஆத்மீக விழிப்பைக் கொடுத்தது பரிசுத்த ஆவியானவரே. கர்த்தரை நாட வேண்டும் என்ற துடிப்பு அவனுக்குள் ஆவியானவரால் விதைக்கப்பட்டது. கர்த்தரை வெறுத்து ஓடிக்கொண்டிருந்த அவன் இப்போது கர்த்தரை நாடி ஓடிவர ஆரம்பித்துவிட்டான். இரட்சிப்பையும் அடைந்தான். எனவே, ஒருவன் கிறிஸ்துவை அடைய சித்தங்கொண்டாலும் அவனால் இரட்சிப்பை அடைய முடியாது என்று கூறுவது முழுத்தவறானது.*

### 4. மனிதர்கள் பாவிகளாக ஆத்மீக மாற்றைத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியாதவர்களாக இருப்பதால் அவர்களுக்கு சுவிசேஷத்தை சொல்லுவதில் எந்தப் பயனுமில்லை என்று சிலர் சொல்லுகிறார்களே, அது சரியா?

*பாவியாகிய மனிதன் ஆத்மீக மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளும் வல்லமையற்றவனாக இருக்கிறான்* (Total Inability) *என்ற போதனையை சரிவரப் புரிந்துகொள்ள முடியாத சிலர் பாவிகளுக்கு சுவிசேஷம் சொல்லுவதில் பயனில்லை என்ற தவறான முடிவுக்கு வந்துவிடுகிறார்கள். மனிதன் மோசமான பாவியாக, இயலாதவனாக இருக்கிறான், அதனால் அவனுக்கு சுவிசேஷம் சொல்லுவதால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை என்று இவர்கள் நினைத்து விடுகிறார்கள். இந்த மாதிரியான தவறான எண்ணம் கிறிஸ்துவின் சீடர்களுக்கும் வந்துவிடுகிற நிலை இருந்தது. மாற்கு 10:24-27 வரையுள்ள வசனங்களைக் கவனியுங்கள். 'சீடர்கள் அவருடைய வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள். இயேசு பின்னும் அவர்களை நோக்கி: பிள்ளைகளே, ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கையாயிருக்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது! ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்றார். அவர்கள் பின்னும் அதிகமாய் ஆச்சரியப்பட்டு: அப்படியானால் யார் இரட்சிக்கப்படக்கூடும் என்று தங்களுக்குள் சொல்லிக் கொண்டார்கள். இயேசு அவர்களைப் பார்த்து: மனுஷரால் இது கூடாதுதான்; தேவனால் இது கூடாததல்ல; தேவனாலே எல்லாமே கூடும் என்றார்.'*

*யாருமே இரட்சிக்கப்படுவது ஆகாத காரியம் என்ற வழியில் சீடர்களுடைய சிந்தனை போவதைக் கவனித்த இயேசு அவர்களைத் திருத்துவதை மேலே நாம் பார்த்த வசனங்களில் கவனிக்கிறோம். எவருடைய இரட்சிப்புக்கும் நாம் மனிதனின் வல்லமையில் தங்கியிருந்தால் எவரும் இரட்சிப்படைவதற்கு வழியே இல்லை. ஆனால், கர்த்தரால் எதையும் செய்ய முடியும் என்று இயேசு அவர்களுக்கு விளக்குகிறார்.*

*மனிதன் இரட்சிப்புக்கு தன்னில் எந்த நம்பிக்கையையும் வைக்கக்கூடாது. 1689 விசுவாச அறிக்கை 9ம் அதிகாரம் (சுயாதீனமான சித்தம்) மூன்றாம் பத்தியில், 'மனிதன் பாவத்தில் வீழ்ந்ததால் இரட்சிப்புக்குரிய எந்தவித ஆவிக்குரிய நன்மைகளையும் செய்யக்கூடிய தனது சித்தத்தின் வல்லமையைப் பூரணமாக இழந்தான்' என்று விளக்குகிறது. அத்தோடு. 'இயல்பாகவே மனிதன் ஆவிக்குரிய நன்மைகளை முற்றிலும் எதிர்ப்பவனாகவும், பாவத்தில் மரித்தவனாகவும் உள்ளான்' என்று அது தொடர்ந்து விளக்குகிறது. தனக்குத் தானே ஆத்மீக விடுதலையைத் தேடிக்கொள்ள முடியாது என்பதையும், கர்த்தர் ஒருவரால் மட்டுமே மனிதனுக்கு இரட்சிப்பை அளிக்க முடியும் என்பதையும் மனிதர்கள் புரிந்துகொள்ள வேண்டும். என்னை நானே இரட்சித்துக்கொள்ள முடியாது என்ற எண்ணம் உதயமாகிறபோதே*

*ஒரு மனிதனுக்கு இரட்சிப்பை அடைவதற்கான வழி திறக்கப்படுகிறது. பாவியாகிய மனிதன் சுவிசேஷத்தைக் கேட்கிறபோது, அவன் மனந்திரும்பி தன்னை விசுவாசிக்க வேண்டும் என்ற கர்த்தரின் சித்தத்தையும் அவருடைய வாக்குறுதிகளையும் காதால் கேட்கிறான். அதைக் கேட்டு அந்தப் பாவியாகிய மனிதன் சுவிசேஷ அழைப்புக்கு உடன்பட வேண்டும் என்று சித்தங்கொள்ளுவானால் அவனால் அதைச் செய்ய முடியும். அவனுடைய இருதயத்தில் ஏற்படுகின்ற இரட்சிப்புக்குரிய அந்த விருப்பத்தை அவனில் ஆவியானவர் விதைப்பதாலேயே அவனால் சுவிசேஷ அழைப்புக்கு உட்பட சித்தங்கொள்ள முடிகிறது. இறையாண்மையுள்ள கர்த்தரே சுவிசேஷத்தை அந்த மனிதனில் திட்ப உறுதியாக செயல்பட வைக்கிறார். பரிசுத்த ஆவியானவர் அவனுடைய கண்களைத் திறந்து, செவி மடல்கள் சுவிசேஷத்தைக் கேட்க வைத்து, செத்துப் போயிருந்த இருதயத்தை இரட்சிப்புக்குரியதாக உயிர்ப்பிக்க வைத்து, பாவத்தினால் பாதிக்கப்பட்டிருந்த அவனுடைய சித்தத்திற்கு விடுதலை கொடுத்து கிறிஸ்துவை விசுவாசிக்க சித்தங்கொள்ள வைக்கிறார். பாவியாகிய மனிதன் இரட்சிப்படைய வேண்டுமென்று விரும்புவானானால், சுவிசேஷத்தின் மூலம் அவனை திட்ப உறுதியாக அழைக்கும் கர்த்தரை விசுவாசிக்க அவனால் சித்தங்கொள்ள முடியும். அவ்வாறு அவன் சித்தங்கொள்ளும்போது இறையாண்மையுள்ள கர்த்தரின் தெரிந்துகொள்ளுதலுக்கும், திட்ப உறுதியான அழைப்புக்குமே* (Effectual call) *அவன் உடன்படுகிறான். இதன் மூலம் கர்த்தரே சகல மகிமையையும் அடைகிறார். இதில் மனிதன் தன்னைப் பாராட்டிக் கொள்ளுவதற்கு ஒன்றுமேயில்லை. மனிதனால் தன்னை இரட்சித்துக் கொள்ள முடியாது. மனிதன் மனந்திரும்பி தன்னை விசுவாசிக்கும்படிச் செய்து கர்த்தரே அவனை இரட்சிக்கிறார். இதெல்லாம் சுவிசேஷ அழைப்பைக் கொடுக்காமல் நடக்க முடியாது (ரோமர் 10). சுவிசேஷ அழைப்பின் மூலமே கர்த்தர் பாவிகளைத் தன்னிடத்தில் வரும்படியாக அழைக்கிறார். எனவே, சுவிசேஷத்தை தீவிரத்தோடு சகல மனிதர்களுக்கும் சொல்லுவதில் நாம் எந்தக் குறைபாடும் கொண்டிருக்கக் கூடாது.*

**மனிதனுடைய சித்தம் சுதந்திரமாக இயங்கவில்லை என்று சீர்திருத்த கிறிஸ்தவர்கள் போதிப்பதாக அவர்களைப் பற்றிய தவறான எண்ணம் பலருடைய உள்ளத்திலும் இருக்கிறது. இதற்குக் காரணம் சீர்திருத்த கிறிஸ்தவம் போதிக்கும், மனிதனுடைய சித்தம் பாவத்தால் முழுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மையை அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டிருப்பதால்தான். உண்மையில் சீர்திருத்த கிறிஸ்தவம் மனிதனுடைய சித்தத்தின் சுதந்திரத்தை (Free Will) துளியளவும் குறைத்துப் பேசவில்லை; அவனுடைய இயலாமையையே (Inability) ஆணித்தரமாக வலியுறுத்திக் காட்டுகிறது.**

# ஆத்தும சிகிச்சையளிக்கும் ஆவிக்குரிய பிரசங்கம்

இந்த இதழில் அல்பர்ட். என். மார்டினினுடைய சுவிசேஷப் பிரசங்கத்தைத் தந்திருக்கிறோம். கடந்த இதழில் இதே போன்று இன்னுமொரு அருமையான சுவிசேஷப் பிரசங்கத்தைத் தந்திருந்தோம். நிச்சயம் நீங்கள் அதை வாசித்திருப்பீர்கள். பயனடைந்தும் இருப்பீர்கள். இந்த சுவிசேஷப் பிரசங்கங்களைப் பற்றிய சில விசேஷ அம்சங்களை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். இந்தப் பிரசங்கங்களில் கொடுக்கப்பட்டிருக்கும் செய்தி பற்றியதல்ல அந்த விஷயம். செய்திகள் வேதபூர்வமானவை. வேத வசனங்கள் அருமையாக தகுந்த முறையில் விளக்கப்பட்டிருக்கின்றன. சுவிசேஷ செய்திகள் எப்படி இருக்க வேண்டுமோ அந்த முறையில் நேர்த்தியாக அமைந்திருக்கின்றன. சுவிசேஷப் பிரசங்கமளிப்பவர்கள் இவற்றை வாசித்துக் கற்றுக்கொள்ளுவது அவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும். நான் சொல்லப்போவது செய்தி பற்றிய காரியமில்லையென்றால் எதைப் பற்றியது என்று நீங்கள் கேட்பது எனக்குத் தெரிகிறது. நான் சொல்லப்போவது இந்த செய்திகளைப் பிரசங்கித்திருப்பவர் அந்த செய்திகளை நேர்த்தியாகத் தயாரித்து அவற்றை எந்த முறையில் கேட்கின்றவர்களின் இதயத்தைத் தொடும் வகையில் அவர்களோடு அந்த செய்தியின் அவசியத்தை வலியுறுத்தி ஒரு தர்க்கவாதியைப் போல விவாதம் செய்து அவர்களுடைய பொறுப்பை ஆணித்தரமாக உணர்த்துகிறார் என்பது பற்றியே நான் விளக்க விரும்புகிறேன். இவற்றைக் கொடுத்திருக்கின்ற பிரசங்கி இவற்றை எப்படிக் கொடுக்கிறார்? இவற்றின் மூலம் ஆத்துமாக்களின் இருதயங்களோடு எப்படி இடைப்படுகிறார் என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும் என்பதுதான் இந்த ஆக்கத்தின் நோக்கம்.

இந்தப் பிரசங்கி இந்தச் செய்திகளின் மூலம் ஆத்துமாக்களோடு ஆவிக்குரிய தர்க்கத்தில் ஈடுபடும் அந்தச் செயல் (a logically powerful spiritual reasoning) இன்றைக்கு பிரசங்கங்களில் பெரும்பாலும் காண முடியாத ஒரு காட்சி. அதுவும், நம்மினத்தில் அத்தகைய காரியங்களை எதிர்பார்க்க முடியாதளவுக்கு சுவிசேஷப் பிரசங்கம் தரம் குறைந்த நிலையில் இருக்கிறது. இதற்கும் தற்கால சுவிசேஷப் பிரசங்கிகளில் நாம் காண்கின்ற, ஆத்துமாக்களின் உணர்ச்சிகளோடு விளையாடி சுவிசேஷ செய்தியின் மூலம் தன்னுடைய இச்சைகளை நிறைவேற்றிக் கொள்ளும் விதத்தில் அவர்களைக் கட்டுப்படுத்துகிற செயலுக்கும் (self centered manipulation of people’s emotions) இடையில் பெரிய வித்தியாசம் இருக்கிறது.

இந்த இரண்டும் வடதுருவம், தென்துருவம் போல் நெருங்கி வரமுடியாத தொலைவில் இருக்கின்றன.

முக்கியமாக கடந்த இதழில் வந்த 'இயேசுவிடம் வர ஏன் சிலருக்கு மனதில்லை' என்ற பிரசங்கத்தை எடுத்துக்கொள்ளுவோம். அந்த செய்தியில் சிலர் இயேசுவிடம் வராமலிருப்பதற்கு என்ன காரணம் என்று வேத வசனங்கள் பலவற்றின் மூலம் தெளிவாக விளக்கியிருக்கிறார் அல்பர்ட் மார்டின். அது மிகவும் அவசியமானது. ஆனால், அவர் அதோடு நிறுத்திவிடவில்லை. 'இதுவரை நான் சொன்னவற்றை வாசித்து நீங்களே புரிந்துகொள்ளுங்கள்' என்று அவர் ஆத்துமாக்களை விட்டுவிடவில்லை. 'ஆவியானவர் இனி செய்ய வேண்டியதை செய்துகொள்ளட்டும், என் வேலையை நான் செய்துவிட்டேன்' என்று சத்தியத்தை வசனங்களால் விளக்கிவிட்டுப் போய்விடவில்லை. அந்த வசனங்களில் சொல்லப்பட்டுள்ள உண்மைகளின் அடிப்படையில் அவர் ஆத்துமாக்களுடைய இருதயங்களோடு இடைப்படும் விதத்தில் தான் இந்தப் பிரசங்கத்தில் ஒரு விசேஷ அம்சத்தை, இந்தக்காலப் பிரசங்கங்களில் பார்க்க முடியாமலிருக்கிற அம்சத்தை நான் பார்க்கிறேன்.

அல்பர்ட் மார்டினின் இந்த இரு பிரசங்கங்களிலும் நான் கவனித்த உண்மைகளை படிப்படியாக விளக்க விரும்புகிறேன்.

(1) முதலில், அவருக்கு ஆத்துமாக்களுடைய இருதயத்தின் உண்மை நிலை (பாவ நிலை) இறையியல் அடிப்படையில் புரிந்திருக்கிறது. அதனால்தான் அவருடைய பிரசங்கத் தலைப்பே, 'இயேசுவிடம் வர ஏன் சிலருக்கு மனதில்லை' என்றிருக்கிறது. 'மனதில்லை' என்ற வார்த்தைக்கு விருப்பமில்லை என்பது அர்த்தமல்ல. ஆங்கிலத்தில் இதற்கு will not என்று அர்த்தம். தமிழில் இதை 'சித்தம் இல்லை' என்றுக் கூறலாம். விருப்பத்திற்கும், சித்தங் கொள்ளுவதற்கும் இடையில் பெரிய வேறுபாடிருக்கிறது. சித்தங் கொள்ளுவது என்பது உறுதியாக ஒரு காரியத்தை சுதந்திரமாக தீர்மானித்து அதில் ஈடுபடுவது என்று பொருள். இயேசுவிடம் சிலர் வராமல் இருப்பதற்குக் காரணம் அவர்கள் சுயமாக வரமாட்டேன் என்று உறுதியாக தீர்மானம் எடுத்து இருப்பதால்தான் என்று இயேசு விளக்குகிறார். ஆத்துமாக்களின் அந்த நிலையை அல்பர்ட் மார்டின் தெளிவாக உணர்ந்திருக்கிறார். அவர்கள் இயேசுவிடம் வராமலிருப்பதற்கு அது மட்டுமே காரணம் என்பதையும், ஆத்துமாக்களின் ஆவிக்குரிய பலவீன நிலையையும் அவர் பூரணமாக அறிந்துவைத்திருக்கிறார். அந்த அறிவும், உணர்வும் ஆத்துமாக்களோடு எப்படிப் பிரசங்கத்தின் மூலம் இடைப்பட வேண்டும் என்ற ஞானத்தையும், வல்லமையையும் அவருக்குக் கொடுத்திருக்கிறது. ஆத்தமாவின் பாவ நிலை பற்றிய இறையியல் விளக்கங்களில் தெளிவில்லாமல் இருந்தால் பிரசங்கம் இருக்க வேண்டிய முறையில் இருக்க முடியாது. அல்பர்ட் மார்டினின் பிரசங்கம் பிரசங்கமாக இருப்பதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம்.

(2) அடுத்ததாக, ஆத்துமாக்களின் இருதய இச்சைகளையும், நோக்கங்களையும், வாழ்க்கையின் இலக்குகளையும் அக்குவேறாகப் புரிந்து

வைத்திருக்கிறார் இந்தப் பிரசங்கி. அவற்றை அவர் வெளிப்படையாகப் பிரசங்கத்தில கொண்டுவந்து ஆத்துமாக்களின் இருதயத்தோடு சம்பாஷனையில் ஈடுபடுவதைக் காண்கிறோம். இந்தப் பிரசங்கத்தைக் கேட்கும் எந்த ஆத்துமாவும் இது என் சம்பந்தப்பட்டதல்ல என்று சொல்லுவதற்கு வழியே இல்லை. ஆத்துமாக்களின் இருதயத்தின் ஆத்மீக நிலையை மட்டுமல்லாது அவர்களுடைய இச்சைகள், நடவடிக்கைகள், வாழ்க்கை முறை என்பவற்றைத் தெளிவாக அறிந்துவைத்திருந்து ஆத்துமாக்களுக்கு அந்நியனைப் போலத் தோன்றாத வகையில் அவர்களுக்கு பக்கத்தில் நின்று எல்லாவற்றையும் பார்த்ததுபோல அல்பர்ட் மார்டினால் வெளிப்படையாகப் பேச முடிகிறது. ஆத்துமாக்களைத் தெரிந்து வைத்திராத ஒருவரால் இப்படிச் செய்யவே முடியாது. பிரசங்கங்கள் இன்றைக்கு புரிந்துகொள்ள முடியாதபடி (strange) இருப்பதற்குக் காரணம் பிரசங்கிகள் ஆத்துமாக்களைவிட்டு தொலைதூரத்தில் நிற்பதுதான்.

(3) இந்தப் பிரசங்கங்களில் மிக முக்கியமாக நான் கவனித்தது 17ம் நூற்றாண்டுப் பிரசங்கிகளில் காணப்பட்ட மிக அவசியமான ஒரு விஷயம். அந்தக் காலத்து பியூரிட்டன் பெரியவர்களை 'ஆத்துமாக்களின் வைத்தியர்கள்' (Doctors of the souls) என்று அழைப்பார்கள். அதற்குக் காரணம் அவர்கள் ஆத்துமாக்களுடைய ஆத்மீகத் தேவையை அறிந்து அதற்குத் தகுந்தாற்போல் ஆத்மீக ஆலோசனைகளை அள்ளி அளித்ததுதான். ஒரு வைத்தியனுக்கு தன்னிடம் வருகின்ற நோயாளியின் நிலை தெரிய வேண்டும். என்ன நோய் அவனைப் பிடித்திருக்கிறது, அந்த நோயால் பாதிக்கப்பட்டு எந்த நிலையில் அவன் இருக்கிறான், அவனுக்கு எப்படித் தகுந்த முறையில் வைத்தியம் செய்ய வேண்டும் என்பதெல்லாம் நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். அவனுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற வாஞ்சை இருந்தால் மட்டும் போதாது. அதற்குமேல் எப்படி அவனுக்கு உதவி செய்ய வேண்டும் என்பது நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். அவசியமானால் அறுவை சிகிச்சையும் செய்யத் தெரிந்திருக்க வேண்டும். அதுபோல, பியூரிட்டன் பிரசங்கிகள் ஆத்தும அறுவை சிகிச்சை செய்வதில் கைதேர்ந்தவர்களாக இருந்தார்கள். ஆத்மீகக் காரியங்களைக் குறித்து ஆத்துமாக்களை சிந்திக்க வைப்பதில் மன்னர்களாக இருந்தார்கள். அவர்களுடைய இருதயத்தோடு சத்தியங்களைப் பயன்படுத்திப் போராடுவதில் சிறந்தவர்களாக இருந்தார்கள். ஜோன் பனியன் (John Bunyan), ஜோன் ஓவன் (John Owen), ஜோன் பிளேவல் (John Flavel), ரிச்சட் சிப்ஸ் (Richard Sibbs) போன்ற பிரசங்கிகளை இதற்கு உதாரணமாகக் காட்டலாம். இந்த விதத்தில் அவர்களுக்குப் பின்னால் சில நூற்றாண்டுகளுக்குப் பிறகு வந்த ஸ்பர்ஜன் பிரசங்கம் செய்திருக்கிறார். பியூரிட்டன்களைப் போல அல்பர்ட் மார்டின் ஆத்துமாக்களுடைய இருதயத்தை அறிந்திருப்பதோடு இயேசுவை விசுவாசிக்க வேண்டிய அவர்களுடைய கடமையை உணர்த்துவதற்காக அவர்கள் ஏன் இயேசுவிடம் இன்றே வரக்கூடாது என்று கேட்டுக் கேட்டு அவர்களைப் பிழிந்தெடுக்கிறார். 'இயேசுவிடம் வர ஏன் சிலருக்கு மனதில்லை' என்ற பிரசங்கத்தில் அவர்கள் இயேசுவிடம் வராமலிருப்பதற்கான உலகக் காரியங்கள்

ஒவ்வொன்றையும் அடுத்தடுத்து சாட்டையடிபோல அவர்களுக்கு முன் எடுத்துவைத்து அவர்களை சிந்திக்கும்படி வற்புறுத்துகிறார். கேட்கின்ற ஆத்துமாக்களுக்கு சமாதானம் இல்லாதபடி அவர்களுடைய இருதயம் இந்தப் பிரசங்கத்தில் அப்பட்டமாகத் திறந்து காட்டப்படுகிறது. வக்கீல் நீதிமன்றத்தில் அடுக்கடுக்காக எடுத்து வைக்கும் வாதங்களைப் போல காரணங்கள் ஒவ்வொன்றையும் அள்ளித் தந்து ஆத்துமாவை விரட்டி விரட்டிப் பிடிக்கிறார் இந்தப் பிரசங்கி. தூங்கினால் மட்டுமே ஒருவனால் இந்தப் பிரசங்கத்தில் இருந்து தப்ப முடியும் என்று சொல்ல வைக்கும்படியாக ஆத்தமாவின் இருதயம் இதில் கசக்கிப் பிழியப்படுகிறது. இது மனிதன் ஆத்துமாக்களின் இருதயத்து உணர்ச்சிகளோடு விளையாடும் செயலல்ல. அதற்கும் இதற்கும் பெரிய வேறுபாடு இருக்கிறது. இங்கே பிரசங்கி ஆத்துமாக்களோடு வேத அடிப்படையில் அவர்களுடைய இருதயத்தை அறிந்திருந்து பெரும் ஆத்மீக தர்க்கத்தில் ஈடுபடுகிறார். இதைக் கவனமாகக் கேட்கின்ற ஆத்துமாவால் என்ன பதில் சொல்ல முடியும்? இதெல்லாம் உண்மையில்லை என்று சொல்லுவதற்கு ஒருவனால் நிச்சயம் முடியாதபடி ஈட்டிபோல் பாய்கிறது ஒவ்வொரு அம்பும். இதைக் கவனித்துக் கெட்கிற ஒருவன், ‘இப்போதே எனக்கு இந்த இயேசு வேண்டும்’ என்று தன்னுடைய இயலாமையோடு கடவுளுக்கு முன் பிச்சைக்காரனைப்போல நிற்கத்தான் முடியும். அகம்பாவத்தோடு இந்த உண்மைகளையெல்லாம் ஒருவன் மறுத்து நிற்பானானால் அதை அவனுடைய அசிங்கமான இருதய ஆணவத்தினால் மட்டுமே செய்ய முடியுமே தவிர சிந்தித்து உணர்ந்ததாலல்ல.

அல்பர்ட் மார்டின் மனித ஆத்துமாவோடு இந்தப் பிரசங்கங்களில் செய்கின்ற ஆவிக்குரிய தர்க்கம் சுலபமானதல்ல. அவர் இரட்சிப்புக்காக மனிதன் எதை வேண்டுமானாலும் செய்துவிட முடியும் என்று இந்தப் பிரசங்கங்களில் சொல்லவில்லை. இயேசுவுக்காக அவர்கள் தீர்மானம் எடுக்க முடியும் என்றும் சொல்லவில்லை. அப்படிச் சொல்லுவது வேதபூர்வமாகாது என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். இரட்சிப்புக்காக ஆத்துமா செய்ய வேண்டிய கடமையை மட்டுமே அவர் வலியுறுத்துகிறார். ‘நீ இரட்சிப்பை அடையாமல் இருப்பதற்கு நீ மட்டுமே, உன்னுடைய செயல்கள் மட்டுமே காரணம்’ என்று ஆணித்தரமாக சொல்லி ஆத்துமாவை சிந்திக்க வைக்கிறார். இயேசுவிடம் இன்றே, இப்போதே மனந்திரும்பி வந்துவிடு என்று அறைகூவலிடுகிறார். இதையே பியூரிட்டன் பெரியவர்கள் தங்களுடைய போதனைகளில் மிகச் சிறப்பாக செய்தார்கள். அத்தகைய ஆவிக்குரிய, ஆவியின் பலத்தினால் ஆத்தும ஆதாயத்துக்காக கொடுக்கப்படும் அருமைப் பிரசங்கங்களை நம்மினம் கேட்கும் ஒரு காலம் வருமா என்பதுதான் கேள்விக்குறியாக இருக்கிறது.

**அட்டைப் படத்தில் நாம் பார்ப்பது இந்தியாவின் சென்னை மாநகரத்திலுள்ள அண்ணா நகரில் அமைந்துள்ள விஸ்வேஸ்வரய்யா பூங்காவிலுள்ள டவர் (இதை அண்ணா நகர் டவர் என்று அழைப்பர்).**

**சவரின் கிரேஸ் வெளியீட்டின் புத்தகங்கள் தமிழகத்திலுள்ள கீழ் வரும் ஐந்து முகவரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.**

## புத்தக அட்டவணை

| எண் | புத்தகப் பெயர் | ஆசிரியர் | ரூ.பை. |
|---|---|---|---|
| 1. | வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்க்கை | A.N. மார்டின் | 25.00 |
| 2. | கர்த்தரின் வேதம் | ஆர். பாலா | 35.00 |
| 3. | அங்கத்துவ அமைப்பில்லாத திருச்சபையா? | ஆர். பாலா | 15.00 |
| 4. | பிரசங்கிகளும் பிரசங்கமும் | ஆர். பாலா | 55.00 |
| 5. | தாம்பத்திய உறவில் நெருக்கம் | அலன் டன் | 75.00 |

**நாமகல்லில்**

திரு. K. அருள் செல்வம், 4/630, கிருபை இல்லம், ஆண்டவர் நகர், நாமக்கல் 637002. கைப்பேசி 9443798315

**கோயமுத்தூரில்**

திரு. டேவிட் பிரகாசா, 14 சுந்தரம் 3வது தெரு, PN புதூர், கோயமுத்தூர் 641041. கைப்பேசி 9500748128

**மதுரையில்**

போதகர் S.D. ஜெரால்டு, (கிருபை சபை) 5B/9/8 - தன்ராஜ் ஸ்டோர், சுப்ரமணியபுரம், விசாலபாகம் 2வது தெரு, மதுரை 625011. கைப்பேசி 9994874077

**கரூரில்**

போதகர் T. அண்ணாதுரை, (கிருபை சுவிசேஷ சபை) வீரியபாளையம் (PO), பஞ்சப்பட்டி (via), K.R. புரம் (TK), கரூர் 639119. கைப்பேசி 9789741732

**சென்னையில்**

போதகர் M. ஜேம்ஸ் (கிருபை சீர்திருத்த சபை) 6/87 காமராஜர் தெரு, திருவள்ளுவர் நகர், அயனாவரம், சென்னை 600023. கைப்பேசி 9445671113

---

**ஸ்ரீலங்காவிலுள்ளவர்கள் திருமறைத்தீபம் இதழைப் பெற கீழுள்ள முகவரியை தொடர்புகொள்ளவும்:**

**டியாகிறைசிஸ் புக் சர்வீஸ், 19 இராஜசிங்க வீதி, கொழும்பு, ஸ்ரீலங்கா**

**ஸ்ரீலங்காவிலுள்ளவர்கள் சவரின் கிரேஸ் வெளியீட்டின் புத்தகங்களைப் பெற கீழுள்ள முகவரியை தொடர்புகொள்ளவும்:**

**திரு. மில்டன் மஸ்குறங்கே, 25 ஷ9 ரோடு, கொழும்பு 13, ஸ்ரீலங்கா. தொலைப்பேசி: 2345654; கைப்பேசி 0722818296**

# திருமறைத்தீபம் இணைய தளம்




## திருமறைத்தீபம்

**ஒரு புதிய இணைய தளத்தை திருமறைத்தீபம் பத்திரிகைக்காக உருவாக்கியிருக்கிறோம். இந்தத் தளத்தில் வாசகர்கள் பத்திரிகையை PDF மற்றும் Unicode மூலமும் வாசிக்கவும், டவுன்லோட் செய்துகொள்ளவும் வசதிகளை ஏற்படுத்தியிருக்கிறோம்.**

## தமிழ் ஆடியோ, வீடியோ பிரசங்கங்கள்

**அத்தோடு இத்தளத்தில் தமிழ் பிரசங்கங்களை வாசகர்கள் கேட்டுப் பயன்பெறவும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே இருக்கும் செய்திகளோடு மேலும் செய்திகளை இனி வருங் காலங்களில் சேர்க்கவிருக்கிறோம்.**

## கிறிஸ்தவ இலக்கியங்கள்

**தமிழில் நாம் வெளியிட்டு வருகிற நூல்களைப் பற்றிய விபரங்களையும், அவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டிய முகவரிகளையும் இத்தளத்தில் தந்துள்ளோம். வாசகர்கள் அந்தந்த முகவரிகளோடு தொடர்புகொண்டு நூல்களைப் பெற்றுக்கொள்ளவும்.**

## புதிய ஆக்கங்கள்

**ஆத்மீக வளர்ச்சிக்கும், இறையியல் அறிவை வளர்த்துக்கொள்ளவும் துணை செய்யும் புதிய ஆக்கங்களையும் வருங்காலத்தில் இந்தத் தளத்தின் மூலம் தரவிருக்கிறோம்.**

**இத்தளம் உங்களுக்குப் பயனளிக்கும் என்று நம்புகிறோம். இது பற்றிய உங்கள் கருத்துக்களையும் எங்களுக்கு அறிவியுங்கள். அது தளத்தை மேலும் உங்களுக்குப் பயன்படும் விதத்தில் அமைக்க எங்களுக்குத் துணை புரியும்.**

**http://www.biblelamp.me**

# திருமறைத்தீபம்

மலர் 18 ஜுலை - செப்டம்பர் 2012 இதழ் 3

1. உன்னைப் பற்றிய குற்றப் பதிவேடும் உனக்குள்ளிருக்கும் பொல்லாத இருதயமும் - அல்பர்ட் என். மார்டின்

2. உன்னால் முடியும் தம்பி!

3. மனித சித்தம்: வரலாற்று, இறையியல் பின்னணி

4. சுதந்திரமாக இயங்கும் மனித சித்தம்

5. நன்மையை மட்டும் நாடிச் செய்த சித்தம்

6. மனித சித்தம்: சில கேள்விகளும் - சில பதில்களும்!

7. ஆத்தும சிகிச்சையளிக்கும் ஆவிக்குரிய பிரசங்கம்

---

## சவரின் கிரேஸ் வெளியீட்டின் புதிய வெளியீடு

போதகர் அல்பர்ட் என். மார்டின் பிரசங்கித்த "பிரியாவிடைப் பிரசங்கங்கள்" தற்போது

"அழிவில்லா ஆத்மீக ஆலோசனைகள்"

என்ற பெயரில் புத்தகமாக அச்சிடப்பட்டிருக்கிறது. பத்திரிகையில் கொடுக்கப்பட்டுள்ள தமிழக முகவரிகளில் இப்புத்தகத்தை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். தபாலில் பெற விரும்புபவர்கள் தபால் கட்டணம் குறித்தத் தகவல்களைக் கொடுக்கப்பட்டுள்ள கைப்பேசி எண்களில் தொடர்புகொண்டு அறிந்துகொள்ளலாம்.